aanmeegamalar.com aanmeegamalar.com aanmeegamalar.com aanmeegamalar.com aanmeegamalar

aanmeegamalar.com
e-magazine www.aanmeegamalar.com
# ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! மெயில் புக்

2025 தீபாவளி சிறப்பிதழ் 2




aanmeegamalar.com

இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

ஹோட்டல்
டெம்பிள் சிட்டி A/c ®

PRODUCT of INDIA
HOME - MADE
PODI, PICKLES
& VADAGAMS

Scan for
Details

NEW JAIL ROAD 86055 13333
THALAVOY STREET 95752 93333
MATTUTHAVANI 98946 83335
PERIYAR BUS STAND 96296 83333
BIBIKULAM 95970 13333
UTHANGUDI 99943 33396
AYYANKOTTAI, NH-44 97913 93333
VADIPATTI, NH-44 97915 93333
SIVARAKOTTAI, NH-44 86082 83333
MADURAI-TENKASAI MAIN ROAD ALAMPATTI, NH-744 97870 08333
RAILWAY JUNCTION 80554 93333
BATLAGUNDU BYPASS 88016 93333
Soon at SILAIMAN NH-87 KARIAPATTI NH-38

www.templecityfoodproducts.com
www.hoteltemplecity.com
customercare@hoteltemplecity.com
/hoteltemplecity

aanmeegamalar.com aanmeegamalar. com aanmeegamalar.com aanmeegamalar.com aanmeegai

# அற்புதம் வாய்ந்த 16 பெருமாள் கோவில்கள்

காக்கும் கடவுளான திருமாலுக்கு உலகம் முழுவதும் ஏராளமான கோவில்கள் உள்ளன. 108 திவ்ய தேசங்கள் தவிர, இன்னும் பல கோவில்கள் உள்ளன. இவற்றில் பலகோவில் களில் பெருமாள், வேறு எங்குமே காண முடியாத அரிய திருக்கோலத்தில் காட்சி தருகிறார்.

இது போன்ற அரிதான கோலங்களில்பெருமாளை தரிசனம் செய்வதும் மிகவும் புண்ணியமானதாகும். வாய்ப்பு இருப்பவர்கள் வாழ்நாளில் ஒருமுறையாவது இந்த தலங்களுக்கு சென்று தரிசிப்பதன் மூலம் பெருமாளின் திருவருளை பெற முடியும்.



அரிதான பெருமாள் திருக்கோலங்கள் கொண்ட கோவில்கள் :

1. திருமுக்கூடல் அப்பன் பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் கோவில் சிவபெருமானைப் போல் தலையில் ஜடாமுடியுடனும், நெற்றிக் கண்ணுடனும் காட்சியளிக்கும் பெருமாள் மும்மூர்த்திகளாக தரிசனம் தரும் பெருமாள்
2. திருப்பதி ஏழுமலைக்கு மேல் நாராயணகிரி என்ற தலம் உள்ளது. இங்கு ஏழுமலையானின் பாதச்சுவடுகள் உள்ளன. இதனை ஸ்ரீவாரி பாதம் என்பார்கள். பெருமாள் திருமலையில் முதலில் தடம் வைத்த இடம் இது தான் என சொல்லப்படுகிறது.
3. திருநெல்வேலி மாவட்டம் நெல்லையப்பர் கோவிலில் உள்ள பெருமாளின் உற்சவ மூர்த்தியின் மார்பில் சிவலிங்க அடையாளம் உள்ளது.
4. உடுப்பியில் உள்ள கிருஷ்ணருக்கு நவராத்திரியின் ஒன்பது நாட்களும் புடவை சாத்தி வழிபடும் முறை உள்ளது.
5. ஆந்திர மாநிலம் பத்ராச்சலத்தில் உள்ள ராமர் கோவிலில் உள்ள ஸ்ரீராமர், கைகளில் சங்கு, சக்கரம் தாங்கி காட்சி அளிக்கிறார்.
6. திருநெல்வேலிக்கு அருகில் உள்ள நாங்குநேரி வானமாமலை பெருமாள் கோவிலில் இருக்கும் மூலவருக்கு தினமும் 3 லிட்டர் எண்ணெய் சாத்தப்படுகிறது. பிறகு இந்த எண்ணெய் பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்படுகிறது.
7. சிவ பெருமானைப் போலவே பெருமாளை மூன்று கண்களுடன் தரிசிக்க முடியும். சென்னை அருகில் உள்ள சிங்கப்பெருமாள் கோவிலில் உள்ள மூலவர் நரசிம்மருக்கு மூன்று கண்கள் உள்ளன.
8. திருக்கண்ணபுரத்தில் ஸ்ரீதேவி, பூதேவி, பத்மினி, ஆண்டாள் என நான்கு தேவியருடன் பத்மாசனத்தில் அமர்ந்த நிலையில் காட்சி அளிக்கிறார் கண்ணபுர பெருமாள்.
9. திருச்சிக்கு அருகில் உள்ள வேதநாராயணன் கேவிலில் காட்சி தரும் பெருமாள் நான்கு வேதங்களையும் தலையணையாக வைத்துப் படுத்திருக்கிறார். அதனாலேயே இவருக்கு வேதநாராயணன் என்ற பெயர் ஏற்பட்டது.
10. கர்நாடகாவிலுள்ள ஸ்ரீரங்கப்பட்டினத்தில் உள்ள ரங்கநாதர் ஆலயத்தில், ரங்கநாதருக்கு படுக்கையாக இல்லாமல், குடை பிடித்தபடி காட்சி தரும் ஆதிசேஷனை தரிசனம் செய்யலாம். இங்கு ஆதிசேஷன் 7 தலைகளுடன் காட்சி தருகிறார்
11. திருமலை, கரூர் தான்தோன்றிமலை, கும்பகோணம் உப்பிலியப்பன் கோவில், திருச்சி குணசீலம் ஆகிய நான்கு பெருமாள் கோவில்களிலும் தாயாருக்கு தனியாக சன்னதி கிடையாது.
12. ஸ்ரீவைகுண்டத்தில் பெருமாள் ஆதிசேஷன் மேல் சயனிக்காமல், ஆதிசேஷன் குடை பிடித்து நின்ற கோலத்தில் காட்சி தருவதை காணலாம்.
13. காஞ்சிபுரம் விளக்கொளிப் பெருமாள் கோவிலில், பெருமாள் ஜோதி வடிவமாக இருப்பதாக ஐதீகம். இங்கு திருக் கார்த்திகை நாளன்று பெருமாளுக்கு விளக்கேற்றி வழிபடும் வழக்கம் உண்டு.
14. தூத்துக்குடி மாவட்டம் கருங்குளத்தில் உள்ள பெருமாள் கோவிலில் பெருமாளை மூன்றடி உயரம் கொண்ட சந்தனக்கட்டை வடிவில் வைத்து அபிஷேக ஆராதனை செய்து வழிபடுகிறார்கள். இதன் இரு புறமும் சங்கு, சக்கரம் உள்ளது.
15. மாமல்லபுரம் தலசயனப் பெருமாள் கோவிலில் பெருமாள் ஒரு கையை தலைக்கு வைத்துக் கொண்டு தரையில் சயனித்து இருக்கும் கோலத்திலும், சங்கு, சக்கரம் இல்லாமலும் காட்சி தருகிறார்.
16. ஆசியாவிலேயே மிகப் பெரிய பள்ளி கொண்ட பெருமாள் கோவில் அமைந்துள்ள தலம் திருமயம். மலையைக் குடைந்து அமைக்கப்பட்டுள்ள சிவன் மற்றும் பெருமாள் கோவில் இது மட்டுமே.

## அதிசயம் நிறைந்த திருவார்ப்பு ஸ்ரீ கிருஷ்ணன்





கேரளாவின் கோட்டயம் மாவட்டத்தில் அமைந்துள்ள 1500 ஆண்டுகள் பழமையான திருவார்ப்பு ஸ்ரீ கிருஷ்ணன் கோவில் ஒரு தனிச் சிறப்பு வாய்ந்தது. இக்கோவில் உலகிலேயே வெறும் 2 நிமிடங்கள் மட்டுமே மூடப்படும் ஒரு அதிசயத் திருத்தலமாகும்.

**முக்கிய சிறப்பம்சங்கள்:** மற்ற கோவில்களைப் போலல்லாமல்,ஆண்டின் எல்லா நாட்களிலும், பகல் மற்றும் இரவு முழுவதும் இந்தக் கோவில் திறந்திருக்கும். இதற்குக் காரணம், இங்குள்ள ஸ்ரீ கிருஷ்ணன் எப்போதும் பசியுடன் இருப்பதாக ஐதீகம்.

**பசியுடன் காட்சி தரும் கிருஷ்ணன்:** கம்சனை வதம் செய்த பின்னர் சினம் மற்றும் பசியுடன் இருந்த கிருஷ்ணனின் ஸ்வரூபமே இங்கு வழிபடப்படுகிறது. நான்கு திருக்கரங்களுடன், வலது கையில் உணவுடனும், பின் கைகளில் சங்கு, சக்கரம் தாங்கியும் காட்சி தருகிறார்.

**தோஷ நிவர்த்தி:** இங்குள்ள ஸ்ரீ கிருஷ்ணனை தரிசிப்பதால் சகல தோஷங்களும் நீங்கும் என்பது நம்பிக்கை.

**கிருஷ்ணனின் பால்ய லீலைகள்:** கார்மேகம் போன்ற நிறம் கொண்ட பரந்தாமன் கிருஷ்ணனின் பால்ய கால லீலைகளை எண்ணும்போதே மனம் பரவசமடைகிறது.

**கோவிலின் அமைவிடம்:** கடற்கரையில், மீனாட்சி ஆற்றின் கரையில் இந்தக் கோவில் அமைந்துள்ளது.

– Ramesh Viswanathan
Sree Janaki Tours, Chennai

## வேண்டுதல்களை நிறைவேற்றும் திருமலை ஆனந்த நிலைய

## விமான வெங்கடேஸ்வரர் ஸ்வாமி




திருப்பதி திருமலையில்பெருமாளை வணங்கும்போது நமது பிரார்த்தனைகளை சொல்ல லாம் என்று நினைத்துக் கொண்டே க்யூவில் சென்று பெருமாளை சேவிக்கும் போது நம் பிரார்த்தனைகள் சொல்லாமல் கோவிந்தா கோவிந்தா என்று சொல்லிக் கொண்டே பெருமாளை வணங்கி செல்வோம்.

நாம் நம் பிரார்த்தனைகள் சொல்லாமல் போனாலும் பெருமாளுக்கு நிச் சயம் தெரியும். பிரார்த் தனைகள் சொல்ல முடியவில்லை என்ற கவலையே வேண்டாம்.

பெருமாள் சேவித்து விட்டு வந்து ஆனந்த நிலைய விமான வெங்கடேஸ்வரர் ஸ்வாமியை சேவித்து நம் பிரார்த்தனைகள் சொல்லலாம். வேண்டிய பிரார்த்தனைகள் நிறைவேறும். என பக்தர்களால் நம்பப்படுகிறது. திருமலையில் கோவிந்தா கோவிந்தா என்று வழிபாடு செய்து ஆனந்த நிலையம் தங்க கோபுரத்ல் உள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வரா சுவாமி தரிசனம் செய்து வேண்டுதலை கூறி வழிபாடு செய்து வாழ்வில் வரங்களை பெற்று செல்கின்றனர் இங்கு தீபாவளி மகா லெட்சுமி பூஜை சிறப்பாக நடைபெறும்.

இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்
செல்: 9894764286
ஸ்ரீ வெங்கடேஸ்வரா
ஸ்வீட்ஸ் & பேக்கரி
சோனையா கோவில் காம்ப்ளக்ஸ், மானாமதுரை
எங்களிடம் உயர்தரமான சுவைமிகு இனிப்பு வகைகள்,
பிறந்தநாள் கேக் வகைகள் கார வகைகள் கிடைக்கும்





உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

aanmeegamalar.com

விருப்ப சந்தா செலுத்த ஸ்கேன் செய்யவும்

e-magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! மெயில் புக்

படியுங்கள்...
aanmeegamalar.com
இதுவரை வெளிவந்த
185 e-book
கட்டணமின்றி டவுன்லோடு செய்து படிக்கலாம்

## வற்றாத செல்வமும் உணவும் தரும் அன்னபூரணியும் தீபாவளி விரதமும்



தேவரும் முனிவரும் எப்போதும் தியானிக்கும் கயிலைவாசன், ஏகாந்தமாக தவத்தில் ஆழ்ந்திருந்த சமயம் பார்வதிதேவி விளையாட்டாக அவர் கண்களைப் பொத்தினாள்.

சூரிய, சந்திரர்களை வலது, இடது கண்களாகவும், அக்கினியையே நெற்றிக் கண்ணாகவும் கொண்டவர் சிவபெருமான். தேவி அவர் கண்களைப் பொத்தியதால் சூரிய, சந்திரர்கள்தம் ஒளியிழந்தனர். அதனால் உலகம் இருண்டது.

அனைத்து உயிர்களும் பரமேஸ்வரனை சரணடைந்தனர். அவர் தன் அக்கினிமயமான நெற்றிக் கண்ணைத் திறந்து உலகிற்கு ஒளியைத் தந்தார்.

இவை அனைத்தும் கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்ததால் பார்வதி தேவி பயந்து உடனே தன் கைகளை ஈசனின் கண்களிலிருந்து எடுத்தாள். கூடவே மனம் கலங்கி அவரிடம் "நான் விளையாட்டாக தங்கள் கண்களை பொத்தியதால் ஏற்பட்ட பாவம் நீங்க என்னபிராயச்சித்தம் செய்ய வேண்டும்?" எனக் கேட்டாள்.

"நமக்கு இது கண்ணிமைக்கும் நேரமே என்றாலும் உலக உயிர்களுக்கு அது எவ்வளவு காலம் என்று உனக்குத் தெரியாதா தேவி? ஏன் இந்த குறும்புத்தனம்? ஆனாலும் நீ உலகிற்கெல்லாம் அன்னை. ஆகவே உன்னை ஒரு பாவமும் அணுகாது" என்றார் ஈசன்.

அந்த வார்த்தைகளால் சமாதானமடையாத அம்பிகை பூவுலகில் தவம் செய்து தன் மீது ஏற்பட்ட பாவத்திற்கு பிராயச்சித்தம் தேட முயன்றாள்.

ஈசனின் அனுமதி பெற்று தென் திசை நோக்கி புறப்பட்டாள்.

அந்த சமயம் காசி திருத்தலத்தில் மழையின்றி, கடும் பஞ்சம் நிலவியிருந்தது. மக்கள் பசியினால் துடித்தார்கள்.

தேவி காசியைஅடைந்து அங்கு அற்புதமான ஒரு திருக்கோயிலை எழுப்பி அன்னபூரணி எனும் பெயரில் நிலை கொண்டாள்.

அவள் திருக்கரத்தில் என்றுமே வற்றாத அட்சயபாத்திரம் எனும்அமுதசுரபியும்பொன்னாலான கரண்டியும் இருந்தன.

அவள் உயிர்களுக்கு உணவு வழங்க ஆரம்பித்தாள். அதனால் மக்களின் பசிப்பிணி நீங்கியது. மக்கள் அன்ன பூரணியை போற்றிப் புகழ்ந்தனர்.

உலகில் உள்ள 84 லட்சம் உயிரினங்களுக்கும், உயிர் வாழ தேவையான உணவு வழங்கும் தெய்வம் என்றால் அது அன்னபூரணி மட்டுமே.

உணவுகள் அனைத்திற்கும் ஆதாரமாக இருப்பது அன்னபூரணி தாயே ஆகும்.

தீபாவளி தினத்தன்று லட்சுமி குபேர பூஜை செய்வதுபோல், அன்னபூரணியை விரதமிருந்து வணங்கிட வற்றாத செல்வமும், உணவும் கிடைக்கும் என்பது ஐதீகம். வாழ்நாள் முழுவதும் ஒருவருக்கு உணவு கிடைக்க அருள்புரியும் தெய்வமாகிய அன்னபூரணி தேவியிடம், ஒரு சமயம் பிட்சாடனாராக வந்த சிவபெருமான் பிச்சை பெற்றார். அப்போது சிவபெருமானின் கையில் இருந்த பிரம்ம கபாலம் அவரை விட்டு விலகியது. அதையடுத்து, சிவபெருமானின் பசியை தீர்த்த அன்னபூரணி, உலகில் உள்ள உயிர்களின் பசிப்பிணியை தீர்க்கவேண்டி காசியிலேயே தங்கி விட்டதாக ஐதீகம்.

காசியில் நவரத்ன சிம்மாசனத்தில் ஒரு கரத்தில் அட்சய பாத்திரத்துடனும், மற்றொரு கரத்தில் தங்க கரண்டியுடனும் அமர்ந்திருக்கும் அன்னபூரணியை, தீபாவளியின்போது 3 நாட்களுக்கு மட்டுமே தரிசிக்க முடியும்.

**விரத வழிபாடு:** அன்னபூரணி தேவியை விரதமிருந்து வழிபட மாதந்தோறும் வருகிறவளர்பிறை செவ்வாய், வெள்ளிக்கிழமைகள் சிறப்பு வாய்ந்ததாகும்.

மேலும், பௌர்ணமி, அமாவாசை தினங்களிலும் விரதமிருந்து வழிபடலாம்.

அன்னபூரணி விரதம் இருப்பவர்கள், காலையில் நீராடி காலை முதல் மாலை வரை உணவு சாப்பிடாமல் இருந்து, மாலை 6 மணியளவில் பூஜை செய்ய வேண்டும்.

வீட்டில் சமைத்த உணவை அன்னபூரணிக்கு நிவேதனமாக வைத்து வழிபாடு செய்ய வேண்டும். இவ்வாறு முறையாக வழிபாடு செய்பவர்களுக்கு வாழ்வில் என்றென்றும், எதற்கும் பஞ்சம் ஏற்படாது.

– கீதாராஜன்

S.ஆனந்தகிருஷ்ணன்&கோ

மரம், ஓடு வியாபாரம் & சாமில்

சீனியப்பா குரூப்ஸ்






SAK மானாமதுரையில் அதி நவீன வசதிகளுடன்
சீனியப்பா லாட்ஜ் A/C
SAK திருமண ஹால்

S.ஆனந்தகிருஷ்ணன்
செல்: 98424 68256



A.குணா (எ) குணசீலன்
செல்: 98428 68256







172, பைபாஸ் ரோடு, மானாமதுரை,
9842868256

எங்களிடம் ஒரிஜனல் (மர்மா), ஆஸ்திரிரேலியா வேங்கை, பர்மா தேக்கு, கேரளா தேக்கு, வெளிநாட்டு மரங்கள், வேம்பு, மருதமரம், நாவல்மரம், நல்ல கலர் உள்ள நாட்டு வாகை மரங்கள், குமிழ்மரம், ரோடு வாகைமரம், பெரிய சுற்றளவு கலர் உள்ள மரங்கள் மற்றும் மர பர்னிச்சர்கள் விற்பனைக்கு தயாராக உள்ளது. மொத்த மர வியாபாரிகள் அணுகவும்.

# பாவங்களைப் போக்கும் ஐப்பசி நீராடல்

ஐப்பசி மாதம் காவிரி நதியில் நீராடுவதை 'துலா ஸ்நானம்' என்றுகூறுவார்கள். துலா மாதமான ஐப்பசிமாதத்தில், உலகில் உள்ள 66 கோடி தீர்த்தங்களும், உலகங்களில் உள்ள புண்ணிய தீர்த்தங்களின் தேவதைகளும், காவிரி நதியில் சங்கமம் ஆவதாக ஐதீகம். அன்றைய தினம் மயிலாடுதுறை மயூரநாதர் திருக்கோவில் முன்பு உள்ள தீர்த்தத்தில் நீராடுவது சிறப்புக்குரியது.

புண்ணிய நதிகளில் நீராடினால்தங்களின் பாவங்கள் போகும் என்ற நம்பிக்கையில்,பலரும் புனித தீர்த்தங்களில் நீராடி வருகிறார்கள். அப்படி தங்களை நாடி வருபவர்களின் பாவங்களைப் போக்கி, அந்த பாவங்களை புண்ணிய நதிகள் ஏற்றுக்கொள்கின்றன.

இதனால் அனைத்து பாவங்களையும் சுமந்து மாசுபட்டு நிற்கும் புண்ணிய நதிகள் அனைத்தும், ஒவ்வொருஆண்டும் துலா மாதம் என்னும் ஐப்பசியில், மயிலாடுதுறையில் உள்ள துலா கட்ட காவிரியில் நீராடி தங்களின் பாவங்களைப் போக்கிக் கொள்வதோடு, தங்களை மென்மேலும் புனிதப்படுத்திக் கொள்வதாக ஐதீகம்.

அப்படி அனைத்து புண்ணிய நதிகளும் வசிக்கும் காவிரியில்,ஐப்பசிமாதம் முழுவதும் சூரிய உதயமாகி, 6 நாழிகைக்குள் நீராட வேண்டும். அதாவது சூரியன் உதயமாகி 2 1/4 மணி நேரத்திற்குள் காவிரியில் நீராட வேண்டும்.

துலா மாதத்தில் மும்மூர்த்திகளும், முப்பத்து முக்கோடி தேவர்களும், 68 ஆயிரம் ரிஷிகளும், முனிவர்களும் கூட காவிரியில் நீராடுவதாக சொல்லப்படுகிறது. எனவே ஐப்பசி மாதத்தில் காவிரி யில் நீராடுவதை சிறப்பான ஒன்றாககருதுகிறார்கள்.

ஐப்பசி மாதத்தில் ஒரு நாளாவது காவிரியில் நீராட வேண்டும். அவ்வாறு செய்ய முடியாதவர்கள், ஐப்பசி மாதம் கடைசி நாள் அன்றாவது மயிலாடுதுறை காவிரி துலா கட்டத்தில் நீராடி, மயிலாடுதுறை அபயாம்பிகை சமேத மயூரநாதர் கோவிலுக்குள் சென்று இறைவனையும்,இறைவியையும் வழிபட வேண்டும். ஐப்பசி கடைசி நாள் நீராடலை, 'கடை முழுக்கு' என்று அழைக்கின்றனர்.

## மயூரநாதர்

திருஞானசம்பந்தர் இரண்டு பதிகங்களிலும், திருநாவுக் கரசர் ஒரு பதிகத்திலும் மயூரநாதரைப் போற்றி பாடியுள்ளனர். கோவிலின் முதல் சுற்று பிரகாரத்தில் தென்கிழக்கு திசையில் மயிலம்மன் சன்னிதி இருக்கிறது.

இத்தலத்தில் அம்மன், மயில்வடிவில் தாண்டவம் ஆடி ஈசனை வழிபட்டதால், இத்திருத்தலத்திற்கு மயிலாடுதுறை' என்று பெயர் வந்தது. ஐப்பசி திருவிழாவின் ஐந்தாம் நாளில் சிவன் பார்வதி இருவரும் ஆடிய மயூர தாண்டவத்தை இங்கு தரிசிக்கலாம். இங்குள்ள நடராஜப் பெருமான், மயூர தாண்டவ கோலத்தில் அருள்பாலிக்கிறார். தினமும் மாலையில், இந்த நடராஜருக்குத் தான் முதல் பூஜை செய்யப்படும்.

## முடவன் முழுக்கு

ஐப்பசி மாதம் முழுவதும் காவிரியின் துலா கட்டத்தில் நீராடினால் நன்மைகள் கிடைக்கும், பாவங்கள் விலகும் என்பதால், அந்த நாளில் நீராட ஒரு கால் பலகீனமான மாற்றுத்திறனாளி. பக்தர் காவிரி துலா கட்டத்திற்குவருவதற்குள், ஐப்பசி மாத இறுதி நாளில் நடைபெறும் கடைமுக தீர்த்தவாரி நடைபெற்று முடிந்து விட்டது. அப்போது அவர் சிவபெருமானை நினைத்து தன் வேதனையை வெளிப்படுத்தினார். "இறைவா.. ஐப்பசிமாதத்தில் இந்த தீர்த்தத்தில் நீராட வேண்டும் என்ற என்னுடைய ஆசை நிறைவேறவில்லையே" என்று புலம்பினார்.

அப்போது சிவபெருமான் அசரீரியாக தோன்றி, "கார்த்திகை முதல் நாளில் நீ, இந்த துலா கட்டத்தில் நீராடு. ஐப்பசி மாதத்தில் இந்த தீர்த்தத்தில் நீராடினால் என்ன பலன்கள் கிடைக்குமோ, அந்தபலன்கள் அனைத்தும் உனக்கும் கிடைக்கும்" என்று அருளினார். அதன்படி கார்த்திகை மாத முதல் நாளில், அந்த சிவ பக்தர் தீர்த்த நீராடி பலன்களைஅடைந்தார். எனவே இந்த நிகழ்வு கார்த்திகை முதல் நாளில் முடவன் முழுக்கு என்ற பெயரில் நடைபெறுகிறது. இந்த தினத்திலும் பக்தர்கள் காவிரி தீர்த்தத்தில் நீராடினால், உரிய பலன்கள் கிடைக்கும்.

மயிலாடுதுறை பேருந்து நிலையத்தில் இருந்து ஒரு கிலோமீட்டர் தூரத்தில் மயூரநாதர் திருக்கோவில் அமைந்துள்ளது.



# திருப்பதி வேங்கடவனின் குலதெய்வம் யார்?



பல பேருக்கு திருப்பதியில் உள்ள வேங்கடவன் குலதெய்வம். ஆனா, அந்த வேங்கடவனுக்கே குலதெய்வம் ஸ்ரீ நரசிம்மர்

ஸ்ரீனிவாச கல்யாணத்திற்கான திருமண பத்திரிக்கையில் குலதெய்வம் என்ற காலத்தில் 'ஸ்ரீ நரசிம்மரை' போடுமாறு ஸ்ரீனிவாசர் கூறுகிறார்.

அன்று தயாரிக்கப்பட்ட விருந்து, ஸ்ரீ நரசிம்மருக்கு நைவேத்தியம் செய்தபிறகே அனைவரும் உண்கின்றனர். திருமணம் முடிந்த ஸ்ரீனிவாசரும், லக்ஷ்மி தேவியும், அஹோபிலம் சென்று ஸ்ரீ நரசிம்மரை வணங்கி வழிப்பட்டனர்.

இவ்விவரங்கள் 'வேங்கடேச மஹாத்மியம்' என்ற நூலில் சொல்லப்பட்டுள்ளது.

சத்யம் விதாதும் நிஜப்ருத்ய பாஷிதம்
வ்யாப்தம்ச பூதேஷு அகிலேஷு சாத்மன:
அத்ருஷ்யதாத் அதியத்புத ரூபமுத்வஹன்
ஸ்தம்பே சபாயாம் ந ம்ருகம் ந மானுஷம்.

ஸ்ரீமத் பாகவத்தில் நரசிம்ம அவதாரத்தில் சொல்லப்பட்ட மிகமிக முக்கியமான ஸ்லோகம்.

நாராயணன் தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான் என்று மிக நம்பிக்கையுடன் சொன்ன தன் பக்தனான பிரகலாதனின் வாக்கை காப்பாற்ற வேண்டி, மிருகமும் அல்லாத மனிதனும் அல்லாத ஒரு உருவத்தில் நரசிம்மனாக கம்பத்தில் இருந்து தோன்றினான்.

மேற்கண்ட ஸ்லோகத்திற்கு இது ஒரு எளிமையான விளக்கம். ஆனா, இந்த ஒரே ஒரு ஸ்லோகத்தை வைத்தே ஒரு நாள் முழுக்க விளக்கங்களால் பரவசப்படுத்தும் உபன்யாசகர்கள் உண்டு.


பிரதம மந்திரி சூரிய வீடு மானியத்திட்டம்

வீட்டின் மாடியில் அமைக்கும் சோலார் பேனல்களுக்கான மத்திய அரசின் மானியங்கள்...

மானிய விவரம்

1 KW ரூ 30,000
ரூ 60,000 2 KW
3 KW ரூ 78,000

TATA POWER SOLAROOF

டாடா பவர் சோலார் ஆன்கிரிட் மூலம் மின்சார கட்டணம் 80% வரை சேமியுங்கள்

25 வருடங்களுக்கு மேல் நீடித்த பயன்பாடு

கடைகள், மருத்துவமனைகள், அலுவலகங்களுக்கு சோலார் பேனல்கள் சிறந்த முறையில் தரமாக அமைத்து தரப்படும்

ஸ்ரீ வாரி சோலார் சொல்யுசன்ஸ்
B. வெங்கடபதி நாயுடு சன்ஸ்

No:39 பழைய ஆஸ்பத்திரி ரோடு, SBI அருகில், அறந்தாங்கி, புதுக்கோட்டை மாவட்டம், தமிழ்நாடு - 614616
97885 02186
6383850024

ஸ்ரீஜானகி டூர்ஸ்
No.24, ரெட்டி தெரு, விருகம்பாக்கம், சென்னை-600 092
செல்: 9094279625 / 9094279626 Email.sreejanaki.tours@gmail.com

சிறப்பு ஆன்மீக சுற்றுலாக்கள்

| | | | |
|---|---|---|---|
| | 25th-30th நவ.2025 6 Days | குஜராத் விமான சிறப்பு சுற்றுலா<br>துவாரஹாடேஷ், ருக்மணி துவாரஹா, பேட் துவாரஹா, போர்பந்தர், நாகேஷ்வர், பாவ்நகர், சோம்நாத்<br>அக்டோபர் 4-ந் தேதிக்கு முன்பு முன்பதிவு செய்தால் தள்ளுபடி-1,000/- | விமான சேவை கட்டணம் ரூ.51,900/- உயர்தர ஓட்டல் & உணவு, |
| | 20th-26th டிச.2025 7 Days | இலங்கை ராமாயண பாதை சுற்றுலா<br>★ சங்கரி தேவி சக்தி பீடம் ★ மானாவாரி கோவில் ★ தம்புல்லா புத்தர் குகைகள் ★ பல்லக்கு கோவில் ★ கண்டி ★ அசோக் வாத்திகா ★ காயத்ரி பீடம் ★ கொழும்பு ★ ராவணன் ஹாட்வெல்ஸ் ★ கதிர் காமம் முருகன்<br>முழு பணமும் கட்டினால் தள்ளுபடி-2000/-<br>முன்பணம்-40,000/- | விமான சேவை கட்டணம் ரூ.85,900/- உயர்தர ஓட்டல் & உணவு, ஏ.சி. டிராவலர் |
| | மார்ச் 30th ஏப்ரல் 11th 2026 12N/13 Days | ஐரோப்பா சுற்றுப்பயணம்<br>பிரான்ஸ், நெதர்லாந்து, ஆம்ஸ்டர்டாம், ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, ஆஸ்திரியா, லிக்டென்ஸ்டீன், இத்தாலி, வெனிஸ், ரோம் வாடிகன்<br>நவராத்திரி சிறப்பு ஸ்பெஷல்-2,000/-<br>முன்பணம்-1,00,000/- | விமான சேவை கட்டணம் ரூ.3,96,900/- உயர்தர ஓட்டல் & உணவு, ஜி.எஸ்.டி. |

SPECIAL COMFORT TOURS (TRAIN / BUS)
● KOLLUR, UDUPI TOUR ● KERALA TEMPLE TOUR
● SHIRIDI, MANTRALAYAM ● NAVAGRAHA TOUR
● KASI, GAYA, ALLAHABAD & PURI ● AHOBILAM & HILL STATION

ONE DAY TOUR (INCLUDING FOOD & A/C VAN)
● THIRUVANNAMALAI GIRIVALAM ● SRIPURAM GOLDEN TEMPLE
● SURUTAPALLI PRADASHOM ● SAKTHI TOUR
● THENNANGUR ● KANCHIPURAM & BALAJI DARSHAN

New 24, REDDY STREET, VIRUGAMBAKKAM, CHENNAI 600092
(Opp JAINS KENCES RETREAT) e-mail:srijanaki.tours@gmail.com
PHONE: 9094279625/9444465924

## 21 தலைமுறை பாவங்களை போக்கும்

# திருச்சுழி பூமிநாதர் திருக்கோயில்






புனித ஸ்தலங்களான காசி, இராமேஸ்வரத்திற்குஅடுத்த படியாக திகழும் ஆலயம் விருதுநகர் மாவட்டத் திலுள்ள திருச்சுழி பூமிநாதர் திருக்கோயில்

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை அருகே உள்ள திருச்சுழி மௌனமே அடையாளமாக திகழ்ந்த உலகம் போற்றிய ஸ்ரீ பகவான் ரமண மகரிஷி பிறந்த புண்ணிய பூமியாகும்.

ஒவ்வொரு யுகத்திலும் இவ்வூரில் பெருவெள்ளம் ஏற்பட்டு பேரழிவு உண்டாவதுண்டு. துவாபர யுகத்தில் பேரழிவு ஏற்பட்ட போது இப்பகுதியை ஆண்டுவந்த பாண்டிய மன்னன் இந்த இயற்கை அழிவிலிருந்து இவ்வூரைக் காப்பாற்ற சிவபெருமானை வேண்டினார்.

அவனது வேண்டுதலை ஏற்றுக் கொண்ட சிவனும் தனது சூலத்தால் தரையில் குத்தி நிலத்தில் ஒரு பெரிய ஓட்டையிட்டு; வெள்ளத்தைப் பூமியில் புகுமாறு செய்தார்.

சிவபெருமானின் சூலத்தைச் சுற்றி வெள்ளம் சுழித்துச் சென்றதால் "சுழி" என்று பெயர் பெற்றுப் பின்னர் "திரு" எனும் அடைமொழி சேர்ந்து திருச்சுழி ஆயிற்று என் தலபுராணம் விவரிக்கிறது. இந்த ஊரின் முழுப்பெயர் திருச்சுழியல் எனவும் கூறப்படுகிறது.

இத்தல இறைவனை சிவராத்திரி அன்று, ஒரு வில்வ இலை கொண்டு அர்ச்சித்தால், உலகம் முழுவதும் உள்ள அனைத்து சிவாலயங்களுக்கும் சென்று வழிபட்ட, அர்ச்சனை செய்த பலன் கிடைக்கும் .

இறைவன் சுயம்பு மூர்த்தியாக அருள்பாலிக்கிறார். அவர் இங்கு திருமணக் கோலத்தில் அருள்கிறார்.எனவே இங்கு வந்து திருமணம் செய்து கொள்வதை மக்கள் பெரும் பாக்கிஎல்லா இடங்களிலும் செய்த பாவங்கள் இந்த ஆலயத்தில் வழிபட்டால் நீங்கும்.

ஆனால் இந்த ஊரில் செய்த பாவம், இங்கின்றி வேறு எங்கும் தீராது. இறந்தவர்களுக்கு அர்ச்சனை செய்து மோட்ச தீபம் ஏற்றும் வழக்கம் இந்த ஆலயத்தில் இருக்கும் சிறப்பாகும்.

அப்படி இறந்தவர்களுக்காக அர்ச்சனை செய்துமோட்ச தீபம் ஏற்றினால், இறந்தவர்களின் பாவங்கள் களையப்பட்டு, அவா்கள் 21 பிறவியைக் கடந்து சிவகதி அடைவார்கள். 21 தலைமுறை பாவங்களை போக்கும் தலம்

இறந்தவரின் பெயரில் அர்ச்சனை செய்து அவரது ஆன்மா மோட்சம் அடைய வழிபடும் ஒரே தலம்.

பச்சிலை மூலிகைகளால் ஆன நடராஜர் அருளும் தலம். இவரை வழிபட தீராத நோய்கள் தீரும் பச்சிலை

சன்னதியில் மேல் பகுதியில் ஸ்ரீசக்கரம் வடிவில் வழிபடப்படும் அம்மன் நிலம் சம்பந்தப்பட்ட அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு தரும் பூமிநாதர. வாஸ்து பிரச்சினை நிவர்த்தி தலம்.

கோவிலுக்கு எப்படிப் போவது?

மதுரையில் இருந்து அருப்புக்கோட்டை சென்று அங்கிருந்து 15 கி.மி. தொலைவில் உள்ளது. மதுரை, அருப்புக்கோட்டையில் இருந்து நேரடி பேருந்து வசதிகள் இருக்கின்றன.

மதுரையில் இருந்து காரியாபட்டி வரை நகரப் பேருந்தில் சென்று, அங்கிருந்து மீண்டும் நகரப் பேருந்தில் திருச்சுழி வரை செல்லலாம்.

மதுரை – காரியாபட்டி – திருச்சுழி தான் நேர் வழி. மதுரையிலிருந்து அருப்புக்கோட்டை சென்று பின் திருச்சுழி செல்வது சுற்று வழியாகும்.

## மனிதர்களை மிருகமாக்கும் 21 குணங்கள்

நல்ல மனிதர்களையும் 21 வகையான கெட்ட குணங்கள் தீயவனாக்குவதாக வேதங்கள் கூறுகின்றன.

1. தற்பெருமை கொள்ளுதல்
2. பிறரைக் கொடுமை செய்தல்
3. கோபப்படுதல்
4. பிறரைப் போலவே வாழ ஆசைப்பட்டு, அதற்கேற்ற பாவனை செய்தல்.
5. பிறர் துன்பத்தைக் கண்டு சந்தோஷப்படுதல்
6. பொய் பேசுதல்
7. கெட்ட சொற்களைப் பேசுதல்
8. நல்லவர் போல் நடிக்கும் இரட்டை வேட மனப்பான்மை
9. புறம்பேசுதல்
10. தகாதவர்களுடன் சேருதலும், ஆதரவு கொடுத்தலும்
11. பாரபட்சமாக நடத்தல்
12. பொருத்தமற்றவர்களைப் புகழுதல்
13. பொய்சாட்சி கூறுதல்
14. எளியோரையும், வலிமை குறைந்தோரைகேலி செய்தல்
15. வாக்குறுதியை மீறுதல்
16. சண்டை, சச்சரவு, வாக்குவாதம்செய்தல்
17. குறை கூறுதல்
18. வதந்தி பரப்புதல்
19. கோள் சொல்லுதல்
20. பொறாமைப்படுதல்
21. பெண்களை தீய நோக்குடன் பார்த்தல்.

## சென்னை மாவட்டத்திலுள்ள பழமையான கோயில்கள்

- ஆதம்பாக்கம் ஸ்ரீ நந்தீஸ்வரர் கோயில்
- அயனாவரம் ஸ்ரீ பரசுராமலிங்கேஸ்வரர் கோயில்
- எழுச்சூர் ஸ்ரீ நல்லிணக்கீஸ்வரர் கோயில்
- காட்டூர் (பொன்னேரி) திருவல்லீஸ்வரர் கோயில்
- கோயம்பேடு ஸ்ரீ குருங்கலீஸ்வரர் கோயில்
- குன்றத்தூர் முருகன் கோயில்
- குன்றத்தூர் ஸ்ரீ வட நாகேஸ்வரர் கோயில்
- மாடம்பாக்கம் ஸ்ரீ தேனுபுரீஸ்வரர் கோயில்
- ஸ்ரீ கபாலீஸ்வரர் கோயில்
- மயிலாப்பூர் ஸ்ரீ விருபாக்ஷேஸ்வரர் கோயில்
- மயிலாப்பூர் ஸ்ரீ மாதவ பெருமாள் கோயில்
- மயிலாப்பூர் ஸ்ரீ ஆதி கேசவ பெருமாள் கோயில்
- பம்மல் ஸ்ரீ அக்கீஸ்வரர் கோயில்
- பாடி திருவலிதாயம் ஸ்ரீ திருவல்லீஸ்வரர் கோயில்
- பூவிருந்தமல்லி ஸ்ரீ வரதராஜபெருமாள் கோயில்
- புரசைவாக்கம் ஸ்ரீ கங்காதீஸ்வரர் கோயில்
- சைதாப்பேட்டை ஸ்ரீ பிரசன்னவேங்கட நரசிம்ஹ கோயில்
- சைதாப்பேட்டை ஸ்ரீ காரணீஸ்வரர் கோயில்
- திருப்போரூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில்
- திருவலிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதி கோயில்
- திருவல்லிக்கேணி ஸ்ரீ திருவேட்டீஸ்வரர் கோயில்
- திருவல்லிக்கேணி ஸ்ரீ தீர்த்தபாலீஸ்வரர் கோயில்
- திருவொற்றியூர் ஸ்ரீ ஆதிபுரீஸ்வரர் கோயில்
- திருவான்மியூர் ஸ்ரீ மருந்தீஸ்வரர் கோயில்
- திருமழிசை ஸ்ரீ ஜகன்னாதபெருமாள் கோயில்
- திருமுல்லைவாயல் ஸ்ரீ மாசிலாமணீஸ்வரர் கோயில்
- திருநீர்மலை ஸ்ரீ ரங்கநாத பெருமாள் கோயில்
- திரிசூலம் ஸ்ரீ திரிஸுலநாதர் கோயில்
- வேளச்சேரி ஸ்ரீ தண்டீஸ்வரர் கோயில்
- வில்லிவாக்கம் ஸ்ரீ சௌம்யாதாமோதர பெருமாள் கோயில்
- வில்லிவாக்கம் ஸ்ரீ அகஸ்தீஸ்வரர் கோயில்
- கோடம்பாக்கம் பாரத்வாஜேஸ்வரர் கோவில்
- வடபழனி வேங்கிஸ்வரர் கோயில்
- வியாசர்பாடி ஸ்ரீ ரவீஸ்வரர் கோயில்
- நெமிலிச்சேரி ஸ்ரீ அகத்தீஸ்வரர் கோயில்

### பிற்கால கோயில்கள்:

- 1200 வளசரவாக்கம் ஸ்ரீ அகஸ்தீஸ்வரர் கோயில்
- 1500 நுங்கம்பாக்கம் ஸ்ரீ அகஸ்தீஸ்வரர் பிரசன்ன வெங்கடேச பெருமாள் கோயில்
- 1639 காளிகாம்பாள் கோவில்
- 1673 ஜார்ஜ் டவுன் ஸ்ரீ கந்தசுவாமி கோயில்
- 18ம் நூற்றாண்டு கொசபேட்டை ஸ்ரீ கந்தசுவாமி கோயில்
- 1700 ராயபுரம் ஸ்ரீ அங்காளபரமேஸ்வரி கோயில்
- 1717 மண்ணடி ஸ்ரீ செங்கழுநீர் பிள்ளையார் கோயில்
- 1734 சிந்தாதரிபேட்டை ஸ்ரீ ஆதிபுரீஸ்வரர் கோயில்
- 1735 ஜார்ஜ் டவுன் ஸ்ரீ கச்சளீஸ்வரர் கோயில்
- 1762 பாரி முனை ஸ்ரீ சென்னகேசவ பெருமாள் கோயில்
- 1779 தண்டையார்பேட்டை ஸ்ரீ அருணாச்சலேஸ்வரர் கோயில்
- 1787 மண்ணடி ஸ்ரீ கிருஷ்ணன் கோயில்
- 19ம் நூற்றாண்டு அயனாவரம் ஸ்ரீ காசி விஸ்வநாதர் கோயில்
- 1800 கோலெட்பெட் கல்யாண வரதராஜ பெருமாள் கோயில்
- 1806 ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அகஸ்தீஸ்வரர் கோயில்
- 1806 ஜார்ஜ் டவுன் ஸ்ரீ காசி விஸ்வநாதர் கோயில்
- 1850 மேற்கு மாம்பலம் ஸ்ரீ கோதண்டராமர் கோயில்
- 1880 வடபழனி முருகன் கோயில்
- 1900 நங்கநல்லூர் ஸ்ரீ அர்தனாரீஸ்வரர் கோயில்
- நங்கநல்லூர் ஆஞ்சநேயர் கோயில்.





aanmeegamalar.com

# மரணபயத்தை போக்கும்

## மகா சித்தர் சூட்டுக் கோல் மாயாண்டி சுவாமிகள்



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள கட்டிக் குளம் கிராமத்தில் அவதரித்த மகா சித்தர் சூட்டுக் கோல் மாயாண்டி சுவாமிகள் முதல் ஜீவ ஒடுக்க கோவில்

கட்டிக் குளம் கருப்பனேந்தல் மடத்தில் உள்ளது. மகா சித்தர் மாயாண்டி சுவாமிகள் முதல் ஜீவ ஒடுக்கம் ஆகும் இங்கு உள்ள தவசாலையில் தன் சீடர்க்கு உள்ளங்கையில் காசி

ராமேஸ்வரம் தரிசிக்க வைத்து ஆயுள் விருத்தி செய்து பல்வேறு அற்புதங்கள் நிகழ்த்தினார். இதேபோல் இங்கு உள்ள தவசாலை முன்பு தை அமாவாசை, ஆடி அமாவாசை, புரட்டாசி

மஹாலயம் அமாவாசை தினங்களில் சிறப்பு

மகா யாகம் நடைபெற்று வருகிறது. இதில் யாக ஜூவாலையில்

மகா சித்தரே ஜோதி வடிவில் தோன்றுவதாக பக்தர்களால் நம்பப்படுகிறது. அன்றைய தினத்தில்

தமிழகம் முழுவதும் ஏராளமான பக்தர்கள்

பிணிகள் தீர்த்து மரணபயத்தை போக்கி ஆயுள் விருத்தி அடைய வேண்டி மகா யாகத்தில் கலந்து கொண்டுள்ளார். இதில் கலந்து கொண்ட பக்தர்கள் அனைவருக்கும் நோய் குணமாகியும்,

திருமணம் தடை நீங்கியும், குழந்தை வரம் வேண்டி வருபவர்களுக்கும்

கைமேல் பலன் கிடைத்ததாக இங்கு வரும் பக்தர்கள் இப்போதும் கூறுகின்றனர். அதேபோல் ஏராளமானோர் மகா சித்தர் மாயாண்டி சுவாமிகள் ஆசியால் அரசு வேலை கிடைக்க பெற்றுஉள்ளனர். இங்கு நடைபெறும் அன்னதான சேவைகளை அரசு வேலை பெற்றவர்கள் இன்றும் செய்து வருகின்றனர். பக்தர்க்கு தன் உள்ளங்கையில் காசி ராமேஸ்வரம் புண்ணிய ஸ்தலங்களை காண்பித்து தரிசிக்க வைத்தும், வாரியர் சுவாமி அருள் பெற்றதும், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறப்பை கூறியும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் அனைவருக்கும் பல்வேறு அற்புதங்களை நிகழ்த்திக் காட்டியும் அருள் ஆசியும் வழங்கியுள்ளார்.

மகாசித்தர் உருவாக்கிய கருப்பனேந்தல் மடம் இப்போதும் தெய்வீக ஆற்றல் சக்தி வாய்ந்த இடமாகஉள்ளது.

தினமும் ஏராளமான பக்தர்கள் தரிசனம் செய்து இங்கு நடைபெறும் நித்ய அன்னதானத்தில் பங்கேற்று செல்கின்றனர். தினமும் அடியார் வடிவில் மாயாண்டி சுவாமிகள் இங்கு வருவதாதாக பக்தர்களால் கூறப்படுகிறது.

மதுரை ராமேஸ்வரம் நான்கு வழி சாலையில் உள்ள முத்தனேந்தலில் கட்டிக்குளம் கருப்பனேந்தல் மடம் வரை ஆட்டோ வசதி உள்ளது. மதுரை சிவகங்கை மானாமதுரையில் இருந்து பஸ் வசதியும் உள்ளது. தற்போது இங்கு மகா சித்தர் மாயாண்டி சுவாமிகள் பிரதிஷ்டை செய்து வழிபாடு செய்த விநாயகர் சன்னதி கருங்கல் கட்டுமான திருபணி நிறைவடைந்து, அவர் பூஜை செய்த தண்டாயுதபாணி சன்னதி கருங்கல் கட்டுமான திருபணி நடைபெற்று வருகிறது. ஆலய தொடர்ப்புக்கு 9976519601 / 8122141659

## காசி ராமேஸ்வரம் செல்ல முடியாதவர்கள் செல்லும் குறிச்சி காசிவிஸ்வநாதர் கோவில்







சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பரமக்குடி சாலையில் உள்ள குறிச்சியில் வரம் தரும் வழிவிடு பெரியநாச்சி அம்மன் கோவில் வளாகத்தில் காசியில் இருந்து பூஜை வழிபாடு செய்து இங்கு காசிவிஸ்வநாதர் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

இது தவிர காசிநந்தி, காசி குருபகவான், காசி துர்க் கை, அன்னபூரணி மற்றும் சாய் பாபா போன்ற சுவாமிகள் சிலைகள் காசியில் இருந்து கொண்டு வரப்பட்டு மூன்று முறை மகா கும்பாபிஷேகம் நடத்தப்பட்டுள்ளது. இங்கு ஆண்டுதோறும் தை ஆடி புரட்டாசி மஹளய அமாவாசை தினங்களில் காசியில் நடைபெரும் முன்னோர் திதி தர்ப்பணம் பூஜை வழிபாடு இங்கு நடைபெறும் பிரதோஷ விழாவில் பக்தர்கள் அனைவரும் கங்கை தீர்த்தத்தால் அபி ஷேகம் செய்து தொட்டு வழிபாடு செய்யலாம்.

மேலும் திருக்கோவில்களுக்கு கும்பாபிஷேகத்திற்க்கு கோவில் நிர்வாகம் சார்பில் இலவசமாக கங்கை தீர்த்தம் வழங்கபட்டு வருகிறது. இங்கு வரும் பக்தர்கள் கங்கை தீர்த்தத்தால் அபிஷேகம் செய்து காசிவி ஸ்வநாதரை தொட்டு வழிபடலாம்.

மானாமதுரை பரமக்குடி செல்லும் சாலையில் உள்ள குறிச்சி காசிவிஸ்வநாதரை காசி ராமேஸ்வரம் செல்லமுடியாத பக்தர்கள் இங்கு வந்து தரிசனம் செய்து காசியாத்திரை பலனை பெறலாம் என கோவில் டிரஸ்டி எஸ்பி தேவர் தெரிவித்தார்.

இவர் 63 முறை ஏராளமான பக்தர்களை தனது சொந்த செலவில் காசி ராமேஸ்வரம் அழைத்து சென்று சுவாமி தரிசனம் செய்ய வைத்து ஆண்டு தோறும் தனது தாயார் நினைவாக கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு அன்னதானம் ஆடை தானம் செய்து வருகிறார்.

இங்கு உள்ள ஸ்ரீ செந்தில் ஆண்டவருக்கு தைப்பூசம் பங்குனி உத்திரம், வைகாசி விசாகம், கார்த்திகை தீபம் ஆகிய நாட்களில் சிறப்பு பூஜைகள் நடைபெற்று வருகிறது. சித்தர் முத்து வடுக நாதர்க்கு தனி சன்னதி உள்ளது. ஆலய தொடர்ப்புக்கு 9444159653




உங்கள் பகுதியில் உள்ள கோவில் கும்பாபிஷேகம், சிறப்பு விழாக்கள், போன்றவற்றை

இதுபோன்ற சிறப்பு மலராக வெளியிட தொடர்பு கொள்ளவும்

தரமாகவும், சிறப்பாகவும் செய்து தருகிறோம்...!

தொடர்பு கொள்ளவும்
அழகுராஜா
முதன்மை செய்தியாளர்
செல்: 9994323622
9444228203


### குழந்தைகள் நன்றாக படிக்க...

நன்றாக படிக்கும் குழந்தைகள் திடீர் என்று படிப்பில் ஆர்வம் குறையும். அதேபோல பெரியோர்களுக்கு கடன் தொல்லை போன்றவை இருந்தால், விநாயகரின் ஆலயத்தில் அவர்களின் பெயரில் அர்ச்சனை செய்து, தேங்காய் எண்ணையையும், தன் குலத்தை காக்கும் குலதெய்வத்திற்கு பிடித்தமான விளக்கெண்ணையும் ஒன்றாக கலந்து, அர்ச்சனை செய்த தேங்காயில் ஊற்றி தீபம் ஏற்றினால் பிரச்சனைகள் விலகும்.




# ஆற்றல் வழங்கும் அழியாநிலை ஆஞ்சநேயர்



அறந்தாங்கியில் இருந்து புதுக்கோட்டை செல்லும் சாலையில் 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது அழியாநிலை எனும் ஊர்.

இங்கு ஆஞ்சநேயருக்கு ஆலயம் ஒன்று உள்ளது. இந்த ஆஞ்சநேயரைவேண்டி வணங்கினால் துன்பங்கள் பறந்து ஓடும். இந்த ஆலயத்தில் இரண்டு அடி பீடத்தில் ஒன்பது அடி உயரம் கொண்ட விஸ்வரூப ஆஞ்சநேயர் அவருக்கு அருகில் செல்வ விநாயகர் ஆலயம் உள்ளது .அசோகவனத்தில் வேதனையில் தவித்த சீதா பிராட்டியின் முன் தோன்றிய ஆஞ்சநேயர் இங்கு விஸ்வரூபம் எடுத்து ஆறுதல் கூறினார்.

அதே விஸ்வரூபத்தில் இங்கே எழுந்தருளிஇருப்பது இந்த பகுதி மக்கள் செய்த தவப்பயன். ஒவ்வொரு சனிக்கிழமை ஆஞ்சநேயருக்கு சந்தன காப்பு வெண்ணை மலர், செந்தூரம் மற்றும் பலவிதமான அலங்காரம் செய்யப்படுவதை பக்தர்கள் பார்த்து ஆனந்தம் அடைகின்றனர்.ஆலயத்தின் அருகில் ஒரு தியான மண்டபம் உள்ளது அதன் முன்பாக 23 அடி உயர கதாயுதம் நிறுவப்பட்டிருக்கிறது. மூலஸ்தானத்திற்கு முன்னால் செல்வ விநாயகர் தனி மண்டபத்தில் எழுந்து அருளியுள்ளார் .அவரை வணங்கி பின்னால் ஆஞ்சநேயரை முன் பட்டொளி வீசி பறந்து கொண்டிருக்கும் அனுமனின் வெற்றி கொடி மரத்தை சுற்றிவிட்டு மூலஸ்தானத்திற்கு சென்று ஆஞ்சநேயரின் அருள் பெற வேண்டும் ஆஞ்சநேயரின் பேராற்றல் மிக்க கதாயுதத்தை வணங்கிய பின் அதை வலம் வர வேண்டும்.

ஆஞ்சநேயர் நெஞ்சில் சீதாராமன் குடியிருப்பதாக ஐதீகம்.அதனால் அவரது நெஞ்சில் பசு நெய் சாத்தி அந்த நெய்யை 48 நாட்கள் அசைவ உணவு ஏதும் சாப்பிடாமல் சாப்பாட்டில் கலந்து சாப்பிட்டு வந்தால் குழந்தை பாக்கியம் கிட்டும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

திருமண பாக்கியம் வேண்டுவோர் மஞ்சள் அரைத்து சாமிபாதத்தில் வைத்து வணங்கி அதனை 48 நாட்கள் (விரதமிருந்து) தொடர்ந்து நீரில் கலந்து சாப்பிட்டு வந்தால் திருமணம் கைகூடும் என்பது இங்கு வரும் பக்தர்களின் அசைக்கமுடியாத நம்பிக்கை.

வேலைவாய்ப்பு,தொழில் அபிவிருத்தி வேண்டுவோர் மஞ்சள் அரைத்து ஆஞ்சநேயர் பாதத்தில் வைத்து வழிபட்டு செல்கின்றனர்.

இந்த கோவிலின் இன்னொரு அதிசய தகவல் ஆஞ்சநேயருக்கு அர்ச்சனைகள் ஏதும் செய்யப்படுவதில்லை.அதுமட்டுமல்ல எந்த ஒரு கட்டணமும் பக்தர்களிடம் பெறப்படுவதில்லை என்பது கூடுதல் சிறப்பு.

– கவிவெண்ணிலவன்,
மணமேல்குடி.

# திருப்பதி கருடசேவையின் சிறப்புகள்

திருப்பதியில் நடைபெறும் மிக தொன்மையான, பாரம்பரிய சிறப்புமிக்க உற்சவங்களில்ஒன்று கருட வாகன சேவை. திருப்பதியில் நடக்கும் உற்சவங்களில் கருட வாகனத்தில்எழுந்தருளும் பெருமாளை தரிசிப்பது மிகவும் புண்ணியமான பலன்களை தரக் கூடிய தரிசனம் என சொல்லப்படுகிறது. இந்த கருட வாகன சேவையை தரிசிக்க ஆயிரக்கணக்கான பக்தர்கள் திருமலைக்கு வருவார்கள். திருமலை திருப்பதியில் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி நாளன்று கருட சேவை உற்சவம் நடைபெறும். இது தவிர பிரம்மோற்சவ காலங்களிலும் கருட சேவை உற்சவம் நடைபெறுவது உண்டு.

திருப்பதியில் உற்சவரான மலையப்ப சுவாமி எத்தனையோ வாகனங்களில் எழுந்தருளி காட்சி தந்தாலும், அவற்றில் கருட வான சேவைக்கு தனிச்சிறப்பு உண்டு. பெருமாளின் கருட சேவை உற்சவம் துவங்கியதே திருமலை திருப்பதியில் தான் என வெங்கடேஷ்வர புராணம் சொல்கிறது.



திருப்பதியில் இருந்து தான் மற்ற வைணவ கோவில் களில் பெருமாளுக்கு கருட சேவை உற்சவம் நடத்தும் பழக்கம் ஏற்பட்டதாகசொல்லப்படுகிறது. இது பக்தியின் வெளிப்பாட்டினை பக்தர்களுக்கு உணர்த்துவதற்காக நடத்தப்படும்உற்சவமாகும். பக்தர்கள் அனைவரும்கருடனை போல் பெருமாளை சரணடைய வேண்டும் என்பதே இதன் தாத்பரியமாகும்.

காசிப முனிவரின் இரண்டாவது இரண்டு மனைவிகளுக்கு இடையே போட்டி ஏற்பட்டது. யாருக்கு முதலில் குழந்தை பிறக்கிறதோ, அவருக்க மற்றவர் அடிமையாக இருக்க வேண்டும் என்பது தான் அந்த போட்டி. ஆனால் முதல் மனைவியின் சூழ்ச்சியால் அவளுக்கே முதலில் குழந்தைகள் பிறக்கிறது. இதனால்இரண்டாவது மனைவி, முதல் மனைவிக்கும் அவரது குழந்தைகளுக்கும் அடிமையாக இருக்க வேண்டியதாயிற்று. அதற்கு பிறகே இரண்டாவத மனைவிக்கு மகனாக கருடன் அவதரித்தார். அவர் மகாவிஷ்ணுவை நோக்கி கடும் தவம் புரிந்தார். தன்னுடைய பக்தியின் வெளிப்பாடாக மகாவிஷ்ணுவை எப்போதும் சுமக்கும் பாக்கியத்தை கருடன் பெற்றார். அதோடு தன்னுடைய தாயையும் அடிமை வாழ்க்கையில் இருந்துமீட்டார். மகாவிஷ்ணுவின் சிறப்புக்குரிய வாகனமாக இருப்பதால் கருடனின் பெருமாள் எழுந்தருளும் காட்சி, மிக உயர்வானதாக கருதப்படுகிறது.

கருட வாகன சேவை கருடனின் பக்தியை போற்றும் வைபவம் ஆகும். பெருமாளின் கம்பீர பவனியை குறிப்பதாலும் இது சிறப்புக்குரிய சேவையாக கருதப்படுகிறது. கருட சேவையின் போது ஆயிரக்கணக்கான பக்தர்கள் திருமலை யில் ஒன்று கூடி, கருட வாகனத்தில் பெருமாள் எழுந்தருளி இருக்கும் வாகனத்தை இழுத்து வருவார்கள். இதனால் இது ஆன்மிகஒற்றையை ஏற்படுத்தும் உற்சவமாகவும்பார்க்கப்படுகிறது.

கருடன், பெருமாள் மீது கொண்ட பக்தியின்காரணமாகவும், பெருமாள் சேவைக்காகவே தன்னை முழுவதுமாக அர்ப்பணித்துக் கொண்ட தாலும் இவரை ஆழ்வார்களில் ஒருவராகவும் நாம் போற்றுகின்றோம்.

கருட வாகன சேவையை தரிசனம் செய்பவர்களை தீயசக்திகள்ஏதும் நெருங்காமல் கருடன் காப்பாற்றுவார். கருடனை கருட பூஜை செய்து வழிபடுபவர்களை எந்த தீமையும் நெருங்காது. ஆரோக்கியம் சிறக்கும். குறிப்பாக தோல் நோய், விஷ பூச்சிகளால் ஏற்படும் நோய்கள் அவர்களை நெருங்காது. எப்படிப்பட்ட தடைகள், பிரச்சனைகள் வந்தாலும் அதிலிருந்து மீள்வார். குடும்ப ஒற்றுமை, செல்வ வளம் ஆகியவற்றை அளிப்பதுடன், பயங்கள், ஆபத்துக்களையும் கருடன் நீக்குவார்.


# அருண்கேஸ் ஏஜன்ஸீஸ்









அன்பு உள்ளங்களுக்கு இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்

மக்கள் சேவையில் 26 ஆண்டுகள்

Bharatgas

भारत पेट्रोलियम


இலவச இணைப்பு வழங்கப்படுகிறது, பதிவு செய்தவுடன் சிலிண்டர் வழங்கப்படுகிறது, வீட்டிற்கே நேரடியாக வந்து உடனடி இணைப்பு வழங்கும் ஒரே நிறுவனம்

தொடர்ந்து எங்களுக்கு ஆதரவு அளித்துவரும் வாடிக்கையாளர்களுக்கும் பொது மக்களுக்கும் நன்றி நன்றி

1/86 பூவந்திமெயின் ரோடு, திருப்புவனம், சிவகங்கை மாவட்டம் செல் 9443274648

aanmeegamalar.com

# முருகப்பெருமான் அருள்புரியும் முக்கியத் திருத்தலங்கள்



பன்னிரண்டு கரங்களோடு போர்த்தளபதி திருக்கோலத்தில், அதேசமயம் தம்பதி சமேதராக முருகப்பெருமானை தென்சேரிகிரி தலத்தில் தரிசிக்கலாம். இத்தலம் பல்லடம் உடுமலைப் பேட்டை பாதையில் உள்ளது.

❖❖❖

பிரணவத்திற்குப் பொருள் தெரியாத நான்முகனை சிறையில் அடைத்த ஐந்து முக முருகப்பெருமானை ஒதிமலையில் தரிசிக்கலாம். கோவை மேட்டுப்பாளையம் அருகில் உள்ள இத்தலத்தில் நான்முகன் அடைபட்ட இரும்புச் சிறையும் உள்ளது.

❖❖❖

பக்தர்கள் கனவில் வந்து தன் ஆலயத்திலுள்ள கண்ணாடிப் பெட்டியில் ஏதேனும் பொருளை வைக்கச் சொல்லி உத்தரவிடும் முருகனை காங்கேயத்தில் தரிசிக்கலாம். முருகன் உத்தரவுப்படை வைக்கப்பட்ட பொருள் சம்பந்தமாகவே அவ்வருட நிகழ்வுகள் நடப்பது அற்புதம். இத்தலத்தை சிவன்மலை என்றும் அழைக்கின்றனர்.

❖❖❖

கோவில்பட்டிக்கும் சங்கரன்கோவிலுக்கும் இடையே உள்ள கழுகுமலையில், வழக்கத்துக்கு மாறாக, இடப்புறம் திரும்பியுள்ள மயில் மீது ஆரோகணித்து வீற்றிருக்கிறார் முருகப் பெருமான். கையில் கரும்பேந்தி அருளும் கந்தனை திருச்சிக்கு அருகே உள்ள செட்டிகுளத்தில் காணலாம்.

❖❖❖

குறமகளான வள்ளியம்மையுடன் முருகப்பெருமான் கருவறையில் வீற்றிருக்கும் அற்புத தரிசனத்தை குமரி மாவட்டம், தக்கலையிலிருந்து 5 கி.மீ தொலைவில் உள்ள குமார கோயிலில் தரிசிக்கலாம்.

❖❖❖

மாமல்லபுரம் கல்பாக்கம் பாதையில் உள்ள திருப்போரூரில் என்றும் வற்றாத திருக்குளத்துடன் கூடிய ஆலயத்தில் பனைமரத்தால் ஆன சுயம்பு மூர்த்தியான முருகப்பெருமானை தரிசிக்கலாம். சிதம்பரசுவாமிகளால் நிறுவப்பட்ட சக்கரம் இத்தலத்தில், முருகப் பெருமானுக்குச் சமமாக போற்றப்படுகிறது.

❖❖❖

தென்காசியிலிருந்து 15 கி.மீ தொலைவில் உள்ள திருமலைக்கேணி குமாரசுவாமி ஆலயத்தில் வஜ்ராயுதம் ஏந்திய அழகே உருவான முருகனை 645 படிக்கட்டுகள் கொண்ட மலை யில் ஏறி தரிசிக்கலாம்.

❖❖❖

திருச்சி மதுரை வழித்தடத்தில் திருச்சியிலிருந்து 26 கி.மீ. தொலைவிலுள்ள விராலிமலையில் ஆறுமுகங்களுடன் மயில் மீது அமர்ந்தபடி முருகப்பெருமான் அருள்கிறார். அவருக்கு இரு புறமும் வள்ளியம்மையும், தெய்வானையும் நின்றிருக்கிறார்கள்.

❖❖❖

அருணகிரிநாதருக்கு திருப்புகழைப் பாடும் திறமையை அருளிய முருகப்பெருமானை திருச்சிக்கு அருகே உள்ள வயலூர் திருத்தலத்தில் கண்டு மகிழலாம்.

❖❖❖

திருவாரூரிலிருந்து 13.கிமீ தொலைவில் உள்ள எண்கண் தலத்தில், எட்டுக்குடி மற்றும் சிக்கல் தலங்களில் உள்ள அதே தோற்றத்தில் முருகப் பெருமானை காட்சியளிக்கிறார்.

❖❖❖

காஞ்சிபுரத்தில் ஏகாம்பரேஸ்வரர்ஆலயத்திற்கும், காமாட்சி அம்மன் ஆலயத்திற்கும் இடையில் சோமாஸ்கந்த அமைப்பில்குமரக் கோட்டம் ஆலயத்தில் கச்சியப்பருக்கு கந்தபுராணத்தை இயற்ற, திகடச் சக்கர எனும் முதல் அடி எடுத்துக் கொடுத்த வேலவனை தரிசிக்கலாம்.

❖❖❖

நாகை, தில்லையாடிக்கருகில்உள்ள திருவிடைக்கழி தலத்தில் குஹ சண்டிகேஸ்வரரோடு அருள்கிறார்,முருகப் பெருமான். இது அபூர்வமான அமைப்பு.

❖❖❖

கோவைக்கு அருகில் உள்ளஅநுவாவி திருத்தலத்தில் சஞ்சீவி மலையைத் தூக்கிச் சென்ற அனுமனின் தாகத்தை தீர்த்த அழகு முருகனை தரிசிக்கலாம்.

❖❖❖

கோவை கிணத்துக்கடவு எனும் கனககிரியில்உள்ள பொன்மலையில் முருகப்பெருமான் கோயில் கொண்டிருக்கிறார். இவரை பார்வை இழந்த அடியவர் ஒருவர் விழிக்குத்துணை உன் மென்மலர்ப்பாதங்கள் என திடமாக நம்ப, அதிசயமாக அந்த அடியவர்க்கு பார்வையை மீட்டுத் தந்தவர் இந்த முருகன்.

❖❖❖

கல்லால் செதுக்கப்பட்ட வேலை தன் கரத்தில் ஏந்தி செங்கோடன், செங்கோட்டையன் எனும் திருப் பெயர்களில் முருகப்பெருமானை சேலத்திலிருந்து 28 கி.மீ தொலைவில் உள்ள திருச்செங்கோடு தலத்தில் காட்சி தருகிறார்.

❖❖❖

சென்னை பாரிமுனையில் கந்த கோட்டத்தில் செல்வ முத்துக்குமார சுவாமியாக தரிசனம் தரும் முருகன், வள்ளலாரால் மகிழ்ந்து வழிபடப்பட்டவர்.

❖❖❖

குற்றாலம் இலஞ்சி. தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் தானே மும்மூர்த்திகளாகவும் இருந்து செயல்படுவதை உணர்த்திய முருகப்பெருமானை வரதராஜபெருமாள் என்ற பெயரில் தரிசிக்கலாம்.

❖❖❖

தென்காசிக்கு 6.கிமீ தொலைவில் உள்ள ஆய்க்குடியில் மழலைவரம் வேண்டுவோர்க்கு படிப்பாயசம் பிராத்தனை மூலம் அருளும் குழந்தை வடிவ குமரனை கண்குளிர காணலாம்.

❖❖❖

சென்னை கபாலீஸ்வரர் ஆலயத்தின் பிராகாரத்தில் சிங்காரவேலவனாக தனித்தனியே யானைகள் மீது அமர்ந்த தேவியருடன் தரிசிக்கலாம்.

❖❖❖

# ராசிக்குரிய கிருஷ்ணர்கள்



ஜோதிட சாஸ்திரத்தில் இருபத்தியேழு நட்சத்திரங்களுக்கும் உருவம் அல்லது குறியீடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவை களை நாம் வெற்றி சின்னங்களாகப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

எப்படி யென்றால், நாம் வசிக்கும் வீடு, பணிபுரியும் இடம், அணியும் ஆடை, அறிமுக முகவரி அட்டை (visiting card), கடித முகவரி ஏடு (Letter pad) இவைகளில் அவரவர் ஜென்ம நட்சத்திரத் திற்குரிய உருவத்தை சின்னங்களாக பயன்படுத்திவந்தால்வாழ்க்கையில் எளிதில் வெற்றி பெறலாம். இதற்கு புராண இதிஹாசங்களில் ஆதாரம் இருப்பதை ஒருசிலர் ஆதாரமாக கூறியுள்ளனர்.

பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் ஜென்ம நட் சத்திரம் ரோஹிணியாகும். ரோஹிணி நட்சத்திரத்தின் உருவம் தேராகும். ஸ்ரீகிருஷ்ணர் தேரோட்டியாக இருந்து பாண்டவர்களுக்கு மஹாபாரதப்போரில் வெற்றி தேடித்தந்தார்.

## அந்த வகையில் பன்னிரு ராசிக்காரர்கள் வழிபடக் கூடிய கிருஷ்ண வடிவங்களைப் பார்ப்போம்

| | |
|---|---|
| மேஷம்: | சங்கு சக்கரம் ஏந்திய கிருஷ்ணன் |
| ரிஷபம்: | பசுவுடன் உள்ள கிருஷ்ணன், குழல் ஊதும் கிருஷ்ணன் |
| மிதுனம்: | ராதையுடன் உள்ள கிருஷ்ணன், பலராமன் உடன் இருக்கும் கிருஷ்ணன் |
| கடகம்: | யசோதை உடன் உள்ள கிருஷ்ணன் |
| சிம்மம்: | மலையை தூக்கி தன் மக்களை காக்கும் கிருஷ்ணன், கிரீடம் தரித்த கிருஷ்ணன் |
| கன்னி: | தனது மனைவியர் உடன் உள்ள கிருஷ்ணன் |
| துலாம்: | துலாபாரம் செய்யும் விதத்தில் உள்ள கிருஷ்ணன் |
| விருச்சிகம்: | காளிங்க நர்த்தனன் |
| தனுர்: | தேரோட்டி கிருஷ்ணன் |
| மகரம்: | மாடு மேய்க்கும் கிருஷ்ணன், குருவாயூர் கிருஷ்ணன் |
| கும்பம்: | வெண்ணை பானையுடன் உள்ள கிருஷ்ணன் |
| மீனம்: | கீதா உபதேசம் செய்யும் கிருஷ்ணன், தசாவதார கிருஷ்ணன். |


ஓம் ஸ்ரீ சற்குருவே சரணம்

அமாவாசை
சிறப்பு பூஜைகள்

ஐப்பசி மாதம் 03 ஆம் தேதி
20.10.2025 திங்கட்கிழமை
மாலை 6.00 மணிக்கும்
இரவு 12.00 மணிக்கும்
சிறப்பு பூஜைகள் நடைபெறும்

ஐப்பசி மாதம் 04 ஆம் தேதி
21.10.2025 செவ்வாய்க்கிழமை
காலை 6.00 மணிக்கும்
பகல் 12.00 மணிக்கும்
சிறப்பு பூஜைகள் நடைபெறும்



சற்குருவின் குரல்
நம்பிக்கை உள்ளவர்க்கு
நம்பிக்கை
ஆனவன்டா சாமி

அனைவரும் வருக! குருவருள் பெறுக!!

கணக்கன்பட்டி ஓம் ஸ்ரீ சற்குரு பழனிசுவாமிகள் டிரஸ்ட்
மோகன் தோட்டம், கணக்கன்பட்டி, பழனி வட்டம், திண்டுக்கல் மாவட்டம் - 624 613.
94867 76551 94682 12345 www.sarguru.org




இறைபணியில் P. முருகேசன் உரிமையாளர்

சுவாமி விலாஸ் விபூதி ஸ்டோர்

186, 6வது தெரு பெரியப்பா நகர், பழனி, செல்9443012588

# அற்புத சக்தி வாய்ந்த 11 அம்மன் திருத்தலங்கள்

### மீனாட்சி அம்மன் கோவில் மதுரை

மதுரையின் மிக முக்கிய அடை யாளம் மதுரை மீனாட்சி அம்மன் கோவில்.

இக்கோவில் வைகை ஆற்றின் தென் பகுதியில் 10 ஏக்கர் பரப்பளவில் மிக கம்பீரமாக அமைந்துள்ளது.

சுந்தரேஸ்வரர் என்ற பெயரிலுள்ள சிவபெரு மானின் மனைவி மீனாட்சியின் பெயரிலேயே குறிப்பிடப்படுவது மற்றும் பெண் சக்தியை முன்னிறுத்தும் விதமாக அமைந்துள்ளது.

இங்கு முதல் பூஜை மீனாட்சி அம்மனுக்கே.

### ஸ்ரீ பாகம்பிரியாள் அம்மன் திருக்கோவில் திருவெற்றியூர்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற சிவாலயம். திருவாடனை அருகே திரு வெற்றியூரில் அமைந்துள்ளது பாகம்பிரியாள் அம்மன் திருக்கோயில். வேண்டுவோர்க்கு வேண்டும் வரங்களை வாரி வழங்கும் வள்ளல் நாயகியாகவும் தீரா பிணிகளை தீர்த்தருளும் மருத்துவச்சியாகவும், பாகம்பிரியாள் அம்மன் விளங்குகிறாள். வாமன அவதாரத்தில் சங்க ரனராகிய மகாவிஷ்ணுவுக்கும், பாற்கடலை கடைய மத்தாக பயன்படுத்திய வாசுகி நாகத் திற்கும் சாப மோட்சம் தந்து இந்த திருக்கோவி லிலேயே ஐக்கியமானதாக ஸ்தல புராணம் கூறுகிறது.

### காமாட்சி அம்மன் கோவில் காஞ்சிபுரம்:

காஞ்சிபுரத்தில் அமைந்துள்ள புகழ்பெற்ற சக்தி தலமாகும் இது.

அம்மனின் 51 சக்தி பீடங்களில் இது காமகோடி சக்தி பீடமாகும். தங்க விமானத் தின் கீழ் அம்மன் அமர்ந்த கோலத்தில் அருள் பாலிக்கிறாள்.

### சமயபுரம் மாரியம்மன் கோவில்

சமயபுரம் மாரியம்மன் கோவில் திருச்சி மாவட்டத்தில் கண்ணபுரம் என்னுமிடத்தில் அமைந்துள்ளது.

இங்கு நடைபெறும் பூச் சொரிதல் என்னும் நிகழ்வு மிகவும் பிரபலம். மாசி மாதத்தில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு 3 லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் வருவார் கள்.

மேலும் சித்திரை தேர் திருவிழா மிகவும் பிரபலம். ஒவ்வொரு வருடமும் சித்திரை முதல் செவ்வாய் அன்று சித்திரை தேரில் பவனி வந்து அம்மன் அருள்பாலிப் பதை பார்க்க 7 லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் திரள் வார்கள்.



### புன்னை நல்லூர் மாரியம்மன் கோவில்:

புன்னை நல்லூர் மாரியம்மன் கோவிலானது தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள புன்னைநல்லூர் என்னுமிடத்தில் அமைந்துள்ளது.

இங்கு அம்மன் சுயம்பு மூர்த்தியாக புற்று வடிவில் அருள்பாலிக்கிறாள்.

இங்கு அம்மன் துர்க்கை, மாரியம்மன் அதா வது முத்துமாரி எனவும் அழைக்கப்படுகிறாள்.

### மாசாணியம்மன் பொள்ளாச்சி:

அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோவில் கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள பொள் ளாச்சி, ஆனைமலையில் அமைந்துள்ளது.

இங்கு தை மாதத்தில் 18 நாள் கள் திருவிழா மிகச்சிறப்பாக நடை பெறுகிறது. இங்குள்ள அம்பாள் மயானத்தில் சயனித்த நிலையில் காட்சி தருவதால் மயானசயனி என்றழைக்கப்பட்டாள்.

### பண்ணாரி மாரியம்மன்:

அருள்மிகு பண்ணாரிமாரியம் மன் திருக் கோவில் ஈரோடு மாவட் டத்தில் பண்ணாரி என்னுமிடத்தில் அமைந்துள்ளது.

இங்கு அம்மன் சுயம்பு வாக அருள் பாலிப்ப தால் விபூதி கிடையாது.

புற்று மண்தான் பிரசாத மாக தரப்படுகிறது.

இங்கு 20 நாள் கொண்டாடப்படும்பங் குனி குண்டம் திருவிழா வை காண லட்சக்கணக் கான பக்தர்கள் வருகிறார்கள்.

### பகவதி அம்மன் கோவில் மண்டைக்காடு:

அருள்மிகு பகவதி அம்மன் திருக்கோவில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மண்டைக் காடு என்னுமிடத்தில் அமைந்துள்ளது.

பெண்களின் சபரிமலை என அழைக்கப்படும் கோவில் இது. 15 அடி உயரம் வரை வளர்ந்து மேற்கூரையை முட்டி கொண்டிருக்கும் புற்று தான் பகவதி அம்மன். இங்கு நடைபெறும் மாசித்திருவிழாவில் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் திரள் வார்கள்.

### ஸ்ரீ பத்ரகாளி அம்மன் கோவில், கொல்லங்கோடு:

கொல்லங்கோடு ஸ்ரீ பத்ரகாளி அம்மன் கோவில் கன்னியாகுமரி மாவட்டத்தில் கொல லங்கோடு என்னுமிடத்தில் அமைந் துள்ளது.

இங்கு நடைபெறும் தூக்க நேர்ச்சை மிகவும் பிரபலம். தூக்க நேர்ச்சையில் 45 அடி உயர தூக்க வில்லில் குழந்தையை சுமந்தபடி கோ யிலை வலம் வருவார்கள். இங்கு அம்மனுக்கு இரண்டு கோவில்கள் இருப்பது சிறப்பு.....

### ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அம்மன் மேல்மலையனூர்:

அருள்மிகு அங்காள பரமேஸ்வரி திருக் கோவில் விழுப்புரம் மாவட்டத்தில் மேல்மலைய னூரில் உள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள மிகவும் புகழ்பெற்ற கோவில்களில் இதுவும் ஒன்றாகும். இங்குள்ள தேவியை புற்று தேவி என்றே கூறுகிறார்கள்.

கருவறையில் உள்ள புற்றையே தேவியாக வழிபட்டு வருகின்றனர். அங்காள பரமேஸ் வரிக்கு பல இடங்களிலும் ஆலயங்கள் இருந்தாலும் மேல்மலையனூர் ஆலயமே மிக முக்கியமான ஆலயமாகும்.

### தேவி கன்னியாகுமரி அம்மன் கோவில்:

தேவி கன்னியாகுமரி அம்மன் கோவில் கன்னியாகுமரி மாவட்டத்தில் முக்கடல்கள் சங்கமிக்கும் குமரி கடற்கரையின் அருகில் அமைந்துள்ளது. இங்குள்ள அம்மன் கன்னி அம்மன். 51 சக்தி பீடங்களில் இது தேவியின் முதுகு பகுதி விழுந்த சக்தி பீடமாகவும் கருதப்படுகிறது. இங்கு உள்நாட்டு பக்தர்கள் மட்டுமல்லாமல் வெளிநாட்டு பக்தர்களும் தொடர்ந்து வருகை புரிகிறார்கள்.

## பிள்ளையார் பிடித்து வைப்பதன் பலன்கள்

- மஞ்சளில் பிள்ளையார் பிடித்து வழி பட சகல சௌபாக்கியமும் கிடைக்கும்.காரிய சித்தி தருவார்
- குங்குமத்தால் பிள்ளையார் பிடித்து வைத்து வணங்க செவ்வாய் தோஷம் அகலும். குழந்தைகளைப் படிப்பில் வல்லவராக்குவார்
- புற்று மண்ணினால் பிள்ளையார் செய்து வணங்க நோய்கள் அகலும். விவசாயம் செழிக்கும்
- வெல்லத்தில் பிள்ளையார் பிடித்து வைத்து வணங்கினால் உடலில் உள்ளேயும், வெளியேயும் உள்ள கட்டிகள்(கொப்பளம்) கரையும்.
- உப்பினால் பிள்ளையார் பிடித்து வைத்து வணங்கினால் எதிரிகளின் தொல்லை நீங்கும். எதிரிகளை விரட்டுவார்.
- வெள்ளெருக்கில் பிள்ளையார் செய்து வணங்கினால் பில்லி, சூனியம் விலகும். செல்வம் உயரச் செய்வார்
- விபூதியால் விநாயகர் பிடித்து வழிப்பட்டால் உஷ்ண நோய்கள் நீங்கும்.
- சந்தனத்தால் பிள்ளையார் செய்து வழிபட்டால் புத்திர பேறு கிடைக்கும்.
- சாணத்தால் பிள்ளையார் செய்துவழிபட்டால் சகல தோஷமும் விலகி, வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெற வழி வகுக்கும்.
- வாழைப் பழத்தில் பிள்ளையார் செய்து வழிபட்டால் வம்ச விருத்தி உண்டாகும்.
- வெண்ணெயில் பிள்ளையார் செய்து வழிபட்டால் கடன் தொல்லை நீங்கும்.
- சர்க்கரையில் பிள்ளையார் செய்து வழிபட சர்க்கரை நோயின் வீரியம் குறையும்.
- பசுஞ்சாண விநாயகர் நோய்களை நீக்குவார்
- கல் விநாயகர் வெற்றி தருவார்
- புற்றுமண் விநாயகர் வியாபாரத்தை பெருக வைப்பார்
- மண் விநாயகர் உயர் பதவி கொடுப் பார். பணி யில் மகிழ்ச்சி வரும்.



## நரம்பு சம்பந்தப்பட்ட நோய்களை குணமாக்கும் இடுக்கு பிள்ளையார்



எந்த நரம்பு சம்பந்தப்பட்ட நோய்கள் இருந் தாலும் திருவண்ணாமலையில் உள்ள இடுக்கு பிள்ளையார் சன்னதிக்குள் சென்று வந்தால் பலன் கிடைக்கும்.

திருவண்ணாமலையில் எத்தனையோவிநாயகர் களை நீங்கள் பார்த்து இருப்பீர்கள். ஆனால் இடுக்கு பிள்ளையார் தனித்துவம் கொண்டவர். திருவண்ணாமலை கிரிவல பாதையில் குபேர லிங்கத்தை தாண்டியதும் வலது பக்கத்தில்இடுக்கு பிள்ளையார் சன்னதி உள்ளது. இந்த இடுக்கு பிள்ளையார் ஒரு பகுதி வழியாக உள்ளே சென்று மறுபகுதி வழியாக வெளியேற வேண்டும்.

படுத்த நிலையில் ஊர்ந்தபடி உடலை குறுக்கி கொண்டுதான் இந்த பிள்ளையாருக்குள் நுழைந்து வெளியே வரமுடியும். இதனால் பெண்களுக்கு கர்ப்பபை கோளாறுகள் நீங்குவதாக ஐதீகம். நரம்பு சம்பந்தப்பட்ட நோய்கள் இருந்தாலும் இடுக்கு பிள்ளையாருக்குள் சென்று வந்தால் பலன் கிடைக்கும்.

இந்த இடுக்கு பிள்ளையாருக்குள் இடைக்காட்டு சித்தர் மூன்று யந்திரங்களை பதித்து வைத்திருப்பதாக சொல்கிறார்கள். இந்த யந்திரங்கள் தரும் அதிர்வு காரணமாகத்தான் நரம்பு சம்பந்தப்பட்ட நோய்கள் விலகுவதாக கூறப்படுகிறது




மதுரை கலையகம்
கோவில் குடைகள், தேர்ச்சீலைகள், தோரணங்கள்,
தொம்பைகள், பல்லக்கு, பன்னாங்கு வகைகள் தயாரிப்பாளர்.
V.சுந்தரவடிவேல்
Visit:
www.maduraikalaiyagam.com
Cell: 98428 05939
27,மீனாட்சி தியேட்டர் தெரு, தெற்குவெளி வீதி, மதுரை-1

# மதுரை அட்சயபாத்திரத்தின் மகத்தான சேவை







அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி (திருக்குறள்)

“பட்டினியாக இருப்போரின் பசியைத் தீர்ப்பதுதான், பிற்காலத்திற் கென சேமித்து வைக்கும் உண்மையான செல்வம்“ என்கிறார் திருவள்ளுவர்.

நவரத்தினங்களில் உயர்ந்தது மாணிக்கம், உலோகங்களில் உயர்ந்தது தங்கம். இவற்றை தானமாகக் கொடுப்பது பற்றி நம் முன்னோர் சிலாகித்துச் சொல்லவில்லை. அன்னதானத்தை பற்றித்தான் அவ்வளவு பெருமையாகச் சொல்லி இருக்கிறார்கள்.

“மகாபாரதத்தில் கர்ணன், இறுதிக் காலத்தில் சொர்க்கம் சென்ற போது, அன்ன தானம் நடந்த இடத்தை கைகாட்டிய விரலை வாயில் வைத்தபோதுதான் அவனது பசி அடங்கியதாம். அவன் செய்த மற்ற தானங்கள் எதுவும் அவனுக்குப் பயன் தரவில்லை.!”

ஆக, நம் முன்னோர்கள் ஒன்றும் சும்மா சொல்லிச் செல்லவில்லை, “தானங்களில் சிறந்தது அன்னதானம்“ என்று.!

“குலதெய்வத்தின் அருள் கிடைக்கும், அடுத்த ஏழேழு தலைமுறைக்கும் நன்மைகள் கிடைத்து, சந்ததிகளும் பிள்ளைகளும் விருத்தி அடைவார்கள்!” என முன்னோர் சொல்லிச் சென்றது அன்னதானத்தின் மகிமையை எடுத்துக்காட்டுகிறது.

சம்பாதித்து தனக்கான உணவுத் தேவையைக் கூடப் பூர்த்தி செய்ய இயலாத, ஆதரவற்ற வறியோரும், முதியோரும் இன்னும் இந்த பூவுலகில் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களுக்கு உதவி செய்யும் அற்புத வாய்ப்பை கருணையான இறைவன் நமக்கு அருளி இருக்கிறான்.

உங்களுக்கு ‘தினமும் யாருக்கேனும் அன்னதானம் செய்யலாம்!’ என்ற எண்ணம் இருக்கும். ஆனால், அதை எவ்வழியில் செய்வது? எனத் தெரியாமல் இருக்கலாம். வேலைப்பளு காரணமாகவும் அதனைச் செய்ய இயலாத சூழல் வரலாம்.

இப்பணியை கடந்த 5 ஆண்டுகளாகத் தொடர்ச்சியாகச் செய்து வரும், ‘மதுரையின் அட்சய பாத்திரத்தோடு’ இணைந்து, இல்லாதோருக்கு உணவு வழங்குங்கள். உணவு சமைத்து, அதனை டப்பாக்களில் அடைத்து, அவர்களது இருப்பிடம் கொண்டு சேர்க்கும் வரை.. ஒரு நாளுக்கு ஒருவருக்கு மதிய உணவுக்கான செலவு ரூபாய் 40 ஆகிறது.

கடந்த 3 ஆண்டுகளுக்கு மேலாக, கருணை உள்ளம் கொண்ட கொடையாளர்களின் உதவியோடு மட்டுமே இது சாத்தியமாகி வருகிறது! அதே சமயம் ஒவ்வொரு மாதமும் கொடையாளர்களைத் தேடிப் பிடிப்பதும் சற்று சிரமமாக இருக்கிறது.

எனவே, ‘365 நாளுக்கும் ஒரு நற்கொடையாளர்’ என்ற வீதத்தில் உங்களின் உதவியை எதிர்நோக்கிக் காத்திருக்கிறோம்.! இதில், பங்கேற்று தினமும் ஒருவருக்குஆகும் செலவான, ரூ.40 வீதம் ஆண்டுக்கு ரூ.14,600 என கொடுத்து பங்கேற்கலாம். அன்றாடம் எவ்வளவோ செலவு செய்கிறோம் ஒரு ஆண்டை கணக்கிட்டால் இது பெரிய தொகையும் அல்ல.!

அரிய வாய்ப்பு இது.! நமக்கு உதவலாம் என்ற எண்ணம் இருந்தாலும் அதை செயல்படுத்துவதில், நடைமுறை சிக்கல்கள் நிறையவே இருக்கும். எங்களோடு இணைந்து தினமும் ஒருவரின் வயிற்றுப் பசியை ஆற்றும் அறப்பணியைக் கைகோர்த்து செய்திட அன்புடன் வேண்டுகிறோம்.!

மேற்கண்டபடி தர இயலாவிட்டால் தாங்கள் விரும்பியபடி எவ்வாறேனும், தங்கள் வசதிக்கு ஏற்பவும் உதவலாம்!

இந்த நல்ல அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு, தயவு செய்து அன்னதானம் செய்து தங்களது சந்ததிகளை விருத்தி பெற செய்வதோடு, முன்னோர் பாவங்கள் ஏதேனும் இருந்தாலும் நிவர்த்தி பெற்று புண்ணியத்தை தேடி கொள்ளுங்கள்.

அன்னதானம் செய்யக்கூடிய வாய்ப்பு எல்லோருக்கும் எளிதாக கிடைத்துவிடாது! கிடைக்கும் இந்த அரிய வாய்ப்பினையும் இறைவன் கொடுத்த நல்வாய்ப்பாகக் கருதி, பயன்படுத்திக் கொள்ளுங்கள் என அன்போடு வேண்டுகிறோம்.!

– மக்கள் பணியில்..
Rtn.நெல்லை பாலு,
நிறுவனர் அனுஷத்தின் அனுக்கிரகம்,
Ct: +91 94426 30815
GPay & Phonepay: +91 9442630815

## திருச்செந்தூரில் மும்மூர்த்தி வடிவில் முருகப்பெருமான்

சிகப்பு சாத்தி சிவன்
வெள்ளை சாத்தி பிரம்மா
பச்சை சாத்தி விஷ்ணு

சிவப்பு சாத்தி, வெள்ளை சாத்தி, பச்சை சாத்தி மூன்றையும் கண்டு மும்மூர்த்திகளின் அருளைப் பெற்றால் எளிதில் முக்தி பெற முடியும் என்று திருச்செந்தூர் தல வரலாற்றில் குறிப்பிடப் பட்டுள்ளது.முருகப்பெருமான் சிவபெருமானின் அம்சமாக அவதரித்தவர். ஓம் எனும் பிரணவ மந்திரத்தின் பொருளை தந்தைக்கே குருவாக இருந்து உப தேசித்தவர்.

அதே மந்திரத்தின் பொருள் தெரியாத பிரம் மாவை, சிறையில் அடைத்தவர். சூரனை சம்ஹாரம் செய்து, தேவர்களை காத்தவர். மாமனான மகாவிஷ்ணுவின் பாசத்திற்கு கட்டுப்பட்டவர். இவ்வாறு முருகன், மும்மூர்த்திகளோடும் தொடர்புடையவராக இருக்கிறார். இதனை உணர்த்தும்விதமாக திருச்செந்தூரில் முருகப்பெருமான், மும்மூர்த்திகளின் அம்சமாக காட்சி தருகிறார். ஆவணி மற்றும் மாசி மாத திருவிழாவின் போது சிவன், பிரம்மா, விஷ்ணு என மும்மூர்த்திகளின் அம்சமாக காட்சி தருகிறார்.

இந்த விழாவின் 7ம் நாளன்று காலை இத்தல ஆறுமுகப்பெருமான் உருகு சட்ட சேவை கண்டருளி, சன்னதி விட்டு வெளியே எழுந்தருள்வார். அன்று மாலையில் இவர் தங்கசுசப்பரத்தில் சிவப்பு சாத்தி கோலத்தில் எழுந்தருளி சிவபெருமானாக காட்சித்தருகிறார்., இந்த சிவப்பு சாத்தி கோலத்தில் ஆறுமுகப்பெருமான் எழுந்தருளும் போது அவருடைய பின் புறத்தில் நடராஜராக காட்சியளிப்பார்.

மறுநாள் எட்டாம் திருநாள் அதிகாலையில் இவர் வெள்ளி சப்பரத்தில் வெள்ளை சாத்தி கோலத்தில் எழுந்தருளி பிரம்மாவாக காட்சித் தருகிறார். பின் பகலில் பச்சைக்கடைசல் சப்பரத்தில் பச்சை சாத்தி கோலத்தில் எழுந்தருளி மகாவிஷ்ணுவாக காட்சித்தருகிறார்.


வாடிக்கையாளர்களுக்கு இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்



ரெத்னா பட்டாசுகடை

உரிமையாளர் B.ரெத்ன காளீஸ்வரன்
Cell:94436 1225
70106 18500 / 86680 08318

MULTI BANK ATM/CASH MECHINE

கொரியர் சர்வீஸ்

DODLA பால்பொருள் மொத்த விற்பனையாளர்

பட்டாசு மொத்த விற்பனையாளர்

dish tv SUN DIRECT BIG TV videocon d2h airtel digital TV TATA Sky ST COURIER The People's Choice DTDC Delivering Value

ஜெராக்ஸ், கலர் ஜெராக்ஸ், லேமினேஷன், செல்போன் சேல்ஸ் சர்வீஸ் மற்றும் அனைத்து வகையான ரீசார்ஜ் கார்டுகளும் கிடைக்கும்

9/378, காமராஜர் ரோடு, இளையான்குடி



இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

உரிமையாளர்: M.இராமு & சன்ஸ்











ஸ்ரீ ஆனந்தவள்ளி பூக்கடை

அனைத்து கோவில் திருவிழா, இல்ல விஷேசங்களுக்கு புதிய டிசைனில் பூ மாலைகள் செய்து தரப்படும்

8883464209 / 9790000188

சுந்தரபுரம் கடை வீதி தேவர் சிலை எதிரில் மானாமதுரை


aanmeegamalar.com

# நரகத்திலிருந்து விடுதலை தரும் தீபாவளி

வெளிச்சத்தின் அருமை இருட்டில்தான் தெரியும். இருட்டில் தடுமாறும்போது, எங்கிருந்தாவது ஒளிராதா என தவிக்கிறோம். மனம் கவலையில் மூழ்கி சோகத்தால் இருண்டிருக்கும். அப்போது தீப ஒளி என்னும் நல்வழி தோன்றாதா! அதன் நடுவே நாம் குதூகலத்துடன் இருக்கமாட்டோமா என எண்ணுகிறோம்.

மனிதனாக பிறந்த ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் ஒவ்வொரு கர்மாவிற்குள் மூழ்கி இருக்க வேண்டும் என்பதுதான் எழுதப்படாத விதியாக உள்ளது. அப்படி குறிப்பிட்ட கர்மாவில் மனிதன் இருந்தாலும், இறைத் தொடர்பு, நல்ல செய்கை, நல்ல எண்ணங்கள் போன்றவற்றை மறக்காமல், எந்த மனிதன் தனது கர்மாவை பூர்த்தி செய்கிறானோ அவன் தெய்வத்திற்கு சமம். கர்மா என்பதை எப்படி வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம், வசதி வாய்ப்பு, ஏழ்மை, பசி, பட்டினி இப்படி எதுவேண்டுமானாலும் ஒரு மனிதனுக்கு நிர்ணயிக்கப்பட்ட கர்மாவாக இருக்கலாம்.

இது போன்ற புராணங்கள் கூறும் கருத்தை மக்கள் மறக்காமல் இருக்கவே வருடம் தோறும் ஏதோ ஒருவிதத்தில், ஒரு பண்டிகையின் வடிவில் இந்து மதத்தில் கொண்டாடப்படுகிறது. அந்த வகையில் இந்துக்களின் பண்டிகைகளில் மிக உயர்ந்த பண்டிகைதான் தீபத் திருநாள் தீபாவளிப் பண்டிகை.

மேலும் இந்தப் பண்டிகையை கொண்டாட ஒருசில விரதமுறையும், மரண பயத்தைப் போக்கவும், நரகலோகத்திற்கு செல்லாமல் இருக்கவும் முன்னோர்களால் தீபாவளிப் பண்டிகைக்கென்றே சிறப்பு விரதமுறைகள் கையாளப்பட்டிருந்தது.

அதாவது துலா (ஐப்பசி) மாதம் தேய்பிறையில் திரயோதசி அன்று மகாபிரதோஷ பூஜை செய்து, யமதீபம் ஏற்ற வேண்டும். எமதர்ம ராஜாவை மனதால் பிரார்த்தனை செய்து, அகாலமரணம் சம்பவிக்காமல் காக்கும்படி பிரார்த்திக்க வேண்டும். மறுநாள் நரக சதுர்த்தசி அன்று, நரகத்திற்கு செல்லாமல் இருக்கவும், ஏற்கனவே நரகத்தில் துன்பப்படுபவர்கள் அங்கிருந்து விடுபடவும் கடவுளைப் பிரார்த்திக்க வேண்டும். எண்ணெய், அரப்புத்தூள், சந்தனம், குங்குமம், மலர்கள், தண்ணீர், புத்தாடை, இனிப்புப்பண்டங்கள், தீபம், இனிப்பு மருந்து, நெருப்புப்பொறி ஆகியவற்றிற்கு பூஜை செய்ய வேண்டும்.

எண்ணெயில் லட்சுமிதேவியும், அரப்புப் பொடியில் சரஸ்வதியும், சந்தனத்தில் பூமிதேவியும், குங்குமத்தில் கவுரியும், புஷ்பத்தில் மோகினிகளும், தண்ணீரில் கங்கையும், புத்தாடைகளில் மகாவிஷ்ணுவும், இனிப்பு மருந்தில் தன்வந்திரியும்), இனிப்பு பண்டங்களில் அமிர்தமும், தீபத்தில் பரமாத்மாவும், நெருப்புப் பொறிகளில் ஜீவாத்மாவும் நமக்கு அருள்பாலிப் பார்கள். இவற்றிற்கு கற்பூர ஆரத்தி காட்டி வணங்கினால் அனைவரும் மனம் குளிர்ந்து ஆசி வழங்கி, நம் குடும்பத்தாரை இருளிலிருந்து ஒளிக்கு அழைத்து வருவார்கள் என்று முன் னோர்கள் கூறி யுள்ளனர்.



## இரண்டு வகையான தீபாவளி:

கெடுதல் அழிந்து நன்மை பிறந்த கதையாக இருந்தாலும், வட இந்தியாவிலும், தென் இந்தியாவிலும் இந்த தீபாவளியை வெவ்வேறு காரணங்களுக்காக கொண்டாடுகின்றனர்.

## தென் இந்திய மக்கள் தீபாவளி:

தென் இந்தியாவில் இந்த தீபாவளிப் பண்டிகையை நரகாசுரனை மையமாக வைத்து கொண்டாடப்படுகிறது. நரகாசுரன் என்ற ஒரு அரக்கன் இருந்தான். அவன் தேவர்களுக்கும் மக்களுக்கும் பல்வேறு துன்பங்களை கொடுத்து வந்தான். நரகாசுரனின் உண்மைப் பெயர் பவுமன். திருமால் வராக அவதாரம் எடுத்து பூமியை துளைத்து அசுரர்களை அழிக்கச்சென்ற போது, அவரின் ஸ்பரிசத்தால் பூமாதேவிக்குப் பிறந்தவன். அசுர வதத்தின் போது பிறந்தவன் என்பதால் அசுர சுபாவம் இவனுக்கு இயல்பாக அமைந்து விட்டது. நரன் என்றால் மனிதன். மனிதனாக இருந்தாலும், துர்க்குணங்கள் நிரம்பியவனாக இருந்ததால் நரகஅசுரன் எனப்பட்டான். அப்பெயரே நரகாசுரன் என்றானது.

இதை அறிந்த மகா விஷ்ணு அவனை கொல்ல நினைத்தார். ஆனால் அவன் பூமி தாய்க்கு பிறந்தவன். அவன் தன் தாயை தவிர வேறு யாராலும் கொல்லப்பட முடியாத வரம் பெற்றிருந்தான். எனவே மகா விஷ்ணு ஒரு தந்திரம் செய்தார். நரகாசுரனுடன் போரிட்டார்.

அவன் மகா விஷ்ணு மீது அம்பு எய்தினான். இந்த அம்பு பட்டு அவர் மயக்கம் அடைவது போல் கீழே விழுந்தார். இதை பார்த்த சத்தய பாமா கோபம் அடைந்து நரகாசுரனை போருக்கு அழைத்தார். சத்திய பாமா பூமியின் அவதாரம் என்று உணராமல் அவரோடு போர் செய்தான். அன்னையின் அம்புக்கு பலியாகி விழுந்தான்.

அப்போதுதான் அவனுக்கு சத்யபாமா தனது தாய் என்று தெரிந்தது. அப்போது அவரிடம், அம்மா, நான் மறைந்த இந்நாள் மக்கள் மனதில் நிற்க வேண்டும். என்னுடைய பிடியிலிருந்து விடுபட்ட தேவர்களும் மக்களும் இந்த நாளை இனிப்பு வழங்கி வெடி போட்டு கொண்டாட வேண்டும் என்று வேண்டினான்.

மகாவிஷ்ணுவும் சத்யபாமாவும் அவனுக்கு வரம் கொடுத்தார்கள். இதையொட்டி நரகாசுரன் மறைந்து மகிழ்ச்சி பொங்கிய நாள் தீபாவளி பண்டிகையாக கொண்டாடப்படுகிறது.

## வட இந்தியாவில் ராவணை மையமாக வைத்து கொண்டாடும் தீபாவளி:

தென் இந்தியாவில் நரகாசுரனை அழித்த தால் கொண்டாடப்படும் பண்டியாக தீபாவளி விளங்கினாலும் வடமாநிலங்களில் ராவணனை மையமாக வைத்து தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படுகிறது. சீதாப்பிராட்டியை கடத்திச் சென்ற ராவணனை வதம் செய்துவிட்டு மிதுலைக்கு வந்த ராமரின் வெற்றியை கொண்டாடும் விதமாக வட மாநிலங்களில் தீபாவளி கொண்டாடப்படுகிறது. வால்மிகி ராமாயணத்தில் முதன் முதலாக தீபாவளி பற்றிய குறிப்புகள் உள்ளன. அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்.



aanmeegamalar.com

# மதுரை அழகர் கோவில் அருகே பொய்கைக்கரைபட்டியில்

# ஸ்ரீ மகா பெரியவா கோவில்

## திருப்பணியில் பக்தர்களும் பங்கேற்கலாம்

மதுரை அழகர் கோவில் அருகே பொய்கை கரைப்பட்டியில் கட்டப்பட்டு வரும் ஸ்ரீ மகா பெரியவா திருக்கோவில் பணிக்கு பக்தர்கள் தங்கள் பங்களிப்பினை வழங்கலாம் என்று மதுரை அனுஷத்தின் அனுகிரகம் டிரஸ்ட் நிறுவனர் நெல்லை பாலு தெரிவித்துள்ளார்.




இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

தமிழ்நாட்டில் மதுரையைத் தவிர்த்து விட்டு, புண்ணியத் திருத்தலங்களைப் பட்டியலிட இயலாது. மகாவிஷ்ணு நம் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் 'கள்ளழகனாக'க் குடி கொண்டிருக்கும் 108 திருப்பதிகளில் ஒன்று கள்ளழகர் திருக்கோயில். அக்கோயிலுக்கான தெப்பக்குளம் அமைந்துள்ள எழில் மிகுந்த 'பொய்கை கரைப்பட்டி'யில், கள்ளழகர் மலை அடிவாரத்தில் 'ஜகத்குரு' காஞ்சி ஸ்ரீ மகா பெரியவருக்கு பெரிய தனிக்கோயில் ஒன்றைக் கட்டுகிறது 'அனுஷத்தின் அனுக்கிரகம்' டிரஸ்ட்.

இதுகுறித்துப் பேசிய அதன் நிறுவனர் நெல்லை பாலு, 'மகா பெரியவா என பக்தர்களால் அழைக்கப்படும் காஞ்சி ஸ்ரீசந்திர சேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளுக்கு, 'காஞ்சி பெரியவர் கிருஹம்' (இல்லம் வடிவில் கோயில்) மதுரை எஸ்.எஸ்.காலனியில் அமைந்துள்ளது. கடந்த 5 ஆண்டுகளாக வாரந்தோறும் வியாழக்கிழமை அன்று குருபூஜை வைபவமும், 165 மாதங்களாக அனுஷம் வைபவமும் மிகச் சிறப்பாக நடந்து வருகிறது. காஞ்சி ஸ்ரீ மகா பெரியவர் பயன்படுத்திய பாதுகையும் இங்கே உள்ளது. மேற்கண்ட நாளில் நாள்களில் காஞ்சிப்பெரியவரின் விக்கிரகம் மற்றும் பாதுகைக்கு சிறப்பு அபிஷேக பூஜைகள் நடைபெறுகிறது.

இதனையே கோயிலாகக் கட்ட வேண்டும் என்ற மகா பெரியவா கனவில் அருள் பாலித்த உத்தரவை ஏற்று, அழகர் கோயில் மலை அடிவாரத்தில் கோயில் கட்டும் பணிகள் தொடங்கி உள்ளன. கடந்த மார்ச் 6ம் தேதி, வாஸ்து மற்றும் பூர்வாங்க பூஜைகள் முடிக்கப்பட்டு, அரசின் தடையில்லா சான்று உட்பட அனுமதிகள் பெறப்பட்டுள்ளன. செப்டம்பர் 7ஆம் தேதி ஆவணி பௌர்ணமியன்று, 11 வேத விற்பன்னர்களோடு பூமி நிர்மாண ஸ்தாபிதம், தேவதை பிரார்த்தனை, மஹன்யாசம், ருத்ர பாராயணம், அர்ச்சனை, விசேஷ ஹோமம், பூஜை மற்றும் அபிஷேகங்கள் செய்யப்பட்டு திருப்பணிகள் தொடங்கியுள்ளன.

முழுக்க முழுக்க ஸ்ரீ மகா பெரியவரின் அனுக்கிரகம் பெற்ற பக்தர்களின் பங்களிப்பினால் மட்டுமே கோயில் திருப்பணிகள் பூர்த்தி பெறும். பக்தர்களின் கைங்கரியத்தால் இடம் வாங்கி, மின் இணைப்பு, குடிநீர் ஆழ்குழாய் போடப்பட்டு, வானம் தோண்டி அஸ்திவாரப் பணிகள் இப்போது நடக்கிறது' என்றார்.

யாருக்கு பாக்கியமும் பிராப்தமும் இருக்கிறதோ அவர்களால் மட்டுமே இந்தக் கோயில் திருப்பணிக்கு உதவவும் முடியும். காஞ்சி பெரியவர் கோயில் திருப்பணி செலவுகள் பல லட்ச ரூபாயைத் தாண்டுவதால், ஒரு சதுர அடிக்கு ரூ.3,500 வீதம் மகா பெரியவர் பக்தர்கள் நன்கொடை வழங்கலாம். சிமெண்ட், மணல், செங்கல், கருங்கல், இரும்புக் கம்பிகள் என கட்டுமான தளவாட சாமான்களும் கொடுக்கலாம் என அனுஷத்தின் அனுக்கிரகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.



மதுரை அழகர்கோவில் அருகே பொய்கைகரைப்பட்டியில் அமைய இருக்கும் ஸ்ரீ மஹாபெரியவா கோவில் கட்டுமான பணி தொடக்க விழாவில் மதுரை ராமகிருஷ்ணமடம் தலைவர் சுவாமி நித்ய தீபானந்தா குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்தார். அருகில் இடமிருந்து ஜெயபாரத் ஹோம்ஸ் நிர்வாக இயக்குனர் ஜெயக்குமார், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத் தலைவர் ஆர்.பி. உதயகுமார், அனுஷத்தின் அனுக்கிரகம் நிறுவனர் நெல்லை பாலு, வழக்கறிஞர் புதூர் ராமகிருஷ்ணன், நந்தினி ரியல் எஸ்டேட் அதிபர் எம்.ஆர். பிரபு ஆகியோர் உள்ளனர்.



மதுரை அழகர் கோவில் அருகே பொய்கைகரைப்பட்டியில் காஞ்சி ஸ்ரீ மகா பெரியவா கோவில் கட்டுமான பணிகளை மங்கையர்க்கரசி மில்ஸ் சேர்மன் பாகனேரி மு. கண்ணப்ப செட்டியார் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்த போது எடுத்த படம். அருகில் இடம் இருந்து தமிழ்நாடு பிராமண சமாஜம் மாவட்ட தலைவர் ரவி, மகா பெரியவா குரூப் சேர்மன் கார்த்திகேயன், ஸ்ரீராமன், அனுஷத்தின் அனுக்கிரகம் நிறுவனர் நெல்லை பாலு, நந்தினி ரியல் எஸ்டேட் நிர்வாக இயக்குனர் எம்.ஆர். பிரபு ,ஆடிட்டர் சேது மாதவா, ரோட்டரி மண்டல ஒருங்கிணைப்பாளர் ரமேஷ் ஆகியோர் உள்ளனர்.


நன்கொடைகளை அனுப்ப

G Pay PhonePe 94426 30815

Cheque, M.O. மூலமாகவும் பணம் அனுப்பலாம்

மக்கள் பணியில்... Rtn. நெல்லை பாலு,

நிறுவனர், அனுஷத்தின் அனுக்கிரஹம்

G-102, சாந்தி சதன் குடியிருப்பு,கோச்சடை,

மதுரை - 625016. செல் : 9442630815



ஒரு லட்சம் ரூபாய் மற்றும் அதற்கு மேல் வழங்குவோரின் பெயர்கள் மஹாபெரியவா கோயில் கல்வெட்டில் பொறிக்கப்பட உள்ளன.

மேலும் விவரங்களுக்கு 94426 30815 என்ற ஜிபே எண்ணில் தொடர்பு கொண்டு கட்டிட திருப்பணிக்கு பணம் அனுப்பலாம்.




# கிரஹ பெயர்ச்சிகளால் உண்டாகும் தோஷங்கள் விலக, பித்ரு சாபம் நீங்க..

# தினமும் ஒருவருக்கு அன்னதானம் செய்து

# உங்களின் ஏழேழு தலைமுறைக்கும் புண்ணியம் சேர்க்க வேண்டுகோள்.!



'365 நாளுக்கும் ஒரு நற்கொடையாளர்'

என்ற விதத்தில் உங்களின் உதவியை எதிர்நோக்கிக் காத்திருக்கிறோம்.! இதில், பங்கேற்று தினமும் ஒருவருக்கு ஆகும் செலவான,

ரூ.40 வீதம் ஆண்டுக்கு

ரூ.14,600 (ரூ.40 X 365 நாட்கள்)

கொடுத்து பங்கேற்கலாம்.



உங்களுக்கு 'தினமும் யாருக்கேனும் அன்னதானம் செய்யலாம்!' என்ற எண்ணம் இருக்கும். ஆனால், அதை எப்படி செய்வது? எனத் தெரியாமலோ, வேலை & சூழல் காரணமாக செய்ய இயலாமலோ இருக்கலாம். தனக்கான உணவுத் தேவையைக் கூடப் பூர்த்தி செய்ய இயலாதோர் இன்றும் இருக்கிறார்கள். அவர்களுக்கு உதவும் அற்புத வாய்ப்பை கருணையான இறைவன் நமக்கு அருளி இருக்கிறான்.

பசிப்பிணி ஆற்றுவதால் **பித்ருக்களுக்கு திதி கொடுத்த புண்ணியம் கிடைக்கும். முன்னோர் சாபம், கிரஹ பெயர்ச்சிகளால் தோஷம் இருந்தாலும் நிவர்த்தி** ஆகும் என்பர் சான்றோர். (24-7-2025 அன்று ஆடி அமாவாசை)

இப்பணியை கடந்த 4 ஆண்டுகளாகத் தொடர்ச்சியாகச் செய்து வரும், 'மதுரையின் அட்சய பாத்திரத்தோடு' இணைந்து, இல்லாதோருக்கு உணவு வழங்குங்கள். உணவு சமைத்து, அதனை டப்பாக்களில் அடைத்து, அவர்களது இருப்பிடம் கொண்டு சேர்க்கும் வரை,

**ஒரு நாளுக்கு ஒருவருக்கு மதிய உணவுக்கான செலவு ரூ.40 ஆகிறது. தினமும் 300 பேருக்கு உணவு வழங்கப்படுகிறது.**

கருணை உள்ளம் கொண்ட கொடையாளர்களின் உதவியோடு மட்டுமே இது சாத்தியமாகிறது! எல்லோரும் இதில் பங்களிப்பு செய்திட நல் வாய்ப்பாக,

தினமும் எவ்வளவோ செலவு செய்கிறோம். ஒரு ஆண்டை கணக்கிட்டால் இது பெரிய தொகையும் அல்ல.!

மேற்கண்டபடி தர இயலாவிட்டால் தாங்கள் விரும்பியபடி, வசதிக்கு ஏற்பவும் உதவலாம்!

இந்த நல்வாய்ப்பைப் பயன்படுத்தி, தங்களது சந்ததிகளை விருத்தி பெற செய்வதோடு, முன்னோர் பாவங்கள் ஏதேனும் இருந்தாலும் நிவர்த்தி பெற்று புண்ணியம் தேடி கொள்ளுங்கள்!

அன்னதானம் செய்யும் வாய்ப்பு எல்லோருக்கும் கிடைக்காது! இதை இறைவன் கொடுத்த நல்வாய்ப்பாகக் கருதி, பயன்படுத்திக் கொள்ள அன்போடு வேண்டுகிறோம்.!





Rtn. நெல்லை பாலு, நிறுவனர்,
மதுரையின் அட்சயப் பாத்திரம்,
G-102, சாந்தி சதன் குடியிருப்பு,
கோச்சடை, மதுரை - 625016.

9442630815

G Pay PhonePe

Account Details:
MADURAIYIN ATCHAYA PAATHIRAM TRUST
Canara Bank
Madurai West Avani Moola St.
A\c No.110031396472
IFSC Code : CNRB0001010
MICR Code : 625015006
(தாங்கள் அளிக்கும் நன்கொடைகளுக்கு 8G வரி விலக்குண்டு.)

advt